MODERN WEAR

பெண்கள், சிறுமிகளுக்கான நவீன ரெடிமேட் ஆடைகள் விற்பனை நிலையம்

இல. 334, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 வைகாசி: 17 துல் ஹஃதா: பிறை: 6 இதழ்: 108

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 31-05-1990

## வாக்காளர் இடாப்பு திருத்தும் வேலைகள்

(காங்கேசன்துறை)

வலி. வடக்கில் நாளை 1-ம் திகதி முதல் வீடு வீடாகச் சென்று வாக்காளர் இடாப்

(8-ம் பக்கம் பார்க்க)

## 168 இளைஞர் விடுதலை

[கொழும்பு]

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகச் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட இளைஞர்களும், தாமாகச் சரணடைந்த இளைஞர்களும் உட்பட 168 இளைஞர்கள் அண்மையில் விடுதலைசெய்யப்பட்டனர். (து)

# ★ கிராமோதய சபை தேர்தலில் போட்டியிட ஆறுவது திருத்தச் சட்டப்படி சத்தியப் பிரமாணம் செய்யத்தேவையில்லை!

## ஜூலை 30க்குள் தேர்தல் நடத்தி சபைகளை இயங்கவைக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை

(சித்தன்கேணி)

கிராமோதய சபைத் தேர்தலில் பங்குபற்றும் அங்கத்தவர்கள் 6-வது திருத்தச் சட்டப்படி இரகசியகாப்பு சத்தியப் பிரமாணம் எடுக்கத் தேவையில்லை என்று கிராமோதயசபைத் தேர்தல் தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளரால் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுற்று நிருபத்தில் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா கிராமோதய சபைகளை இயங்க வைக்குமாறு பணித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடெங்கிலுமுள்ள சகல கிராமோதய சபைகளுக்கும் யூலை மாதம் 30ம் திகதிக்கு முன்னர் தேர்தல்களை நடத்தி ஆரம்பித்து வைக்கவேண்டும்.

கிராமோதய சபைகள் அனைத்தும் கடந்த பல வருடங்களாக இயங்காமல் இருக்கின்றன இவற்றிற்கு யூலை மாதம் 30ம் திகதிக்கு முன்னர் அங்கத்தவர்களுக்கிடையே தலைவரைத் தெரிவுசெய்வதற்குத் தேர்தலை நடத்திச் செயற்பட வைக்குமாறு உள்ளூராட்சி ஆணையாளர் சகல உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களுக்கும் சுற்று நிருபம் அனுப்பிவைத்துள்ளார்.

யாழ். மாவட்டத்திலுள்ள சகல கிராமோதய சபைகளுக்கும் தேர்தல்களை நடத்துவதற்கு யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவிஆணையாளர் திரு.

(8ம் பக்கம் பார்க்க)

## பாஸ்போர்ட் கிடைத்த 5 மாதங்களின் பின் பெற்றோரின் கடவுச்சீட்டை சமர்ப்பிக்குமாறு கடிதம்!

[மானிப்பாய்]

கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்து அதனைப் பெற்றுக் கொண்ட சிறுமிக்கு 5 மாத காலத்தின்பின் தாய், தந்தையரின் கடவுச்சீட்டைச் சமர்ப்பிக்குமாறு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குருநகர் வாசியான 12 வயதுச் சிறுமிக்கு நேர்ந்துள்ளது.

(8-ம் பக்கம் பார்க்க)

## பி. பி. சி. உலக சேவை ஒலிபரப்பில் மாற்றங்கள்!

(லண்டன்)

பி. பி. சி. உலக சேவையின் ஒலிபரப்பில் சில மாற்றங்கள் ஏற்பட இருக்கின்றன.

ஜப்பானிய மற்றும் மலாய் மொழிகளில் சேவைகள் முற்றாக நிறுத்தப்படவிருக்கின்றன அவை இரண்டும் நிறுத்தப்

(8-ம் பக்கம் பார்க்க)

## மாணவர் இயக்கம் - நிதர்சனம் இணைந்து நடாத்தும் மாணவர் புதிர் போட்டி!

(நாவற்குழி)

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கமும், நிதர்சனம் தொலைக்காட்சி நிறுவனமும் இணைந்து கோட்டமட்டத்தில் மாணவர்களிடையே புதிர்ப் போட்டியொன்றை நடத்தவிருக்கிறது.

மேஜர் முரளி நினைவு வெற்றிக் கேடயத்திற்கான இப்

(8-ம் பக்கம் பார்க்க)

## வட-கிழக்கு மாகாணத்துக்கு ஒன்பது கோடி ரூபா உதவி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சுகாதார வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக இத்தாலிய

(8ம் பக்கம் பார்க்க)

## ஜனவரி முதல் ஏப்ரல் வரை 17 லட்சம் ரூபா வீடமைப்பு நிதியாக வழங்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபையால் இந்த வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் ஏப்ரல் மாதம் வரை வீடமைப்பு நிவாரணமாக 17 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

மாதாந்தம் 701 ரூபா தொடக்கம் 1500 ரூபா வரை வருமானமுள்ள வீடுகள் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீடுகளைத் திருத்தியமைப்பதற்காக இந்த நிதி நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி குடும்பங்களுக்குக் கடனாக வழங்க மேலும் 12 லட்சம் ரூபா நிதியும் சபையால் வழங்கப்பட்டுள்ளது.

[153]

## இந்திய உள்துறை அமைச்சரை நீக்குமாறு 50 எம்.பி.க்கள் பிரதமரிடம் கோரிக்கை!

(லண்டன்)

இந்தியாவில் காஷ்மீர் விவகாரம் கையாண்ட முறை காரணமாக உள்துறை அமைச்சர் முக்தி முகமத்சயித் பதவியிலிருந்து நீக்கப்படவேண்டுமென அரசைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐம்பதுபேர் பிரதமர் திரு. வி. பி. சிங்கை வேண்டியுள்ளனர்.

இந்த 50 ஜனதாதள் உறுப்பினர்களும் நேற்று முன்தினம் இந்தியப் பிரதமருக்குச் சமர்ப்பித்த விண்ணப்பத்தில் உள்துறை அமைச்சில் காஷ்மீர்

(8-ம் பக்கம் பார்க்க)

## கொடுப்பனவுகளுக்குத் தேவையான நிதி வசதிகளை மாகாணசபைகளே ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்

(மட்டக்களப்பு)

மாகாணசபை உத்தியோத்தர்களுக்கு சம்பளமுற்பணம், கடன் வழங்குதல் தொடர்பாக கடன் வழங்கல் கணக்கொன்றினைத் தயார் செய்து அதற்காகத் தேவைப்படும் நிதிகளைப் பெற்றுக் கொள்ளும் வழிமுறைகளை மாகாண சபைகளே தயார் செய்து கொள்ளல் வேண்டுமென அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான 24/90 இலக்க சுற்றறிக்கை அரசாங்க நிர்வாக மாகாண சபைகள், உள்நாட்டலுவல்கள்

(8-ம் பக்கம் பார்க்க)

## நயினாதீவு இறங்குதுறை தற்காலிகமாக திருத்தப்படும்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு நாகபூசணி அம்மன் இறங்குத்துறை தற்காலிகமாக திருத்தப்பட விருக்கிறது. திருத்தவேலைகள் ஜூன் மாதம் 10-ந் திகதி ஆரம்பமாகவிருக்கிறது.

வீதி அபிவிருத்தித் திணைக்களம் இந்த தற்காலிக திருத்த வேலைகளை மேற்கொள்ளவுள்ளது.

(8-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

28-05-1990 அன்று பருத்தித்துறையில் இருந்து காங்கேசன்துறை நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது த கந்தவனம் கட்டடப்பகுதி கல்விக் கந்தோர் யாழ்ப்பாணம் என விலாசமிடப்பட்ட கந்தோர் பையுடன் டயறியும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். த, கந்தவனம் கலைவாணி வீதி, தையிட்டி காங்கேசன் துறை. (சி-3924)

### புலமைப்பரிசில் பரீட்சை - 1990

ஆண்டு 5- புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை ஒவ்வொரு சனிக்கிழமையும் பிற்பகல் 3.00 — 6.00 வரைநடைபெறுகிறது. வெளிமாணவர்களும் தோற்றலாம். விபரங்களுக்கு எலைற் இன்ஸ்ரிரியூட் (வண்ணை தபாலகம் முன்பாக), 99, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (சி-3917)

# "இன்றைய அமைதிக்கு புலிகளின் தியாகமே காரணம்" -கருணா

(மட்டக்களப்பு)

''தமிழீழ விடுதலைப்புலிகளின் தியாகம்தான் இன்றைய அமைதியான சூழ்நிலை உருவாகக் காரணமாகும். விடுதலைப்புலிகள் அமைதிக்கு புறம்பானவர்களல்ல'' என்று அண்மையில் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடைபெற்ற விளையாட்டு அமைச்சின் விளையாட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசிய தமிழீழவிடுதலைப் புலிகள் பிராந்திய தளபதி கருணா குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்: ''தமிழீழ விடுதலைப் புலிகள் ஸ்ரீலங்கா அரசுடன் நம்பிக்கையின் அடிப்படையில்தான் பேச்சுவார்த்தைநடத்துவதை பல தடவைகள் தெரிவித்துள்ளோம். சந்தேகமான நிலைப்பாடு இன்று காணப்பட்டாலும் அமைதிக்கு புறம்பானவர்கள் அல்ல என்பதை எடுத்துக் காட்டவே தொடர்ந்து பேசுகின்றோம். விளையாட்டுத்துறையில் எமது மக்கள் கொண்டுள்ள ஆர்வம், அக்கறையைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்'' என்றார்.

மட்டக்களப்பு அரசஅதிபர் திரு. ஆர். யோகநாதன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசினார். [121]

### சட்டவிரோத மின்பாவனை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பகுதியில் சட்டவிரோத மின்பாவனை அதிகரித்து வருகிறது.

இதனால் மின்பாவனையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (101)

### ஒத்திவைப்பு

[மட்டக்ப்ளப்பு]

வெல்லாவெளியில் ஜூன் 2ம் திகதி நடைபெறவிருந்த 2வது நடமாடும் செயலகம் ஜூன் மாதம் 16ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது [12]

### புதிய கூட்டுறவு உ. ஆணையாளர்

(நெடுந்தீவு)

கூட்டுறவு அபிவிருத்திஉதவி ஆணையாளராக (நிர்வாகம்) திரு எஸ். லிங்கநாதன் நியமனம் பெற்றுள்ளார். (133)

### நோயினால் கோழிகள் பலி

[கொக்குவில்]

திருநெல்வேலி, கொக்குவில் பகுதிகளில் கோழிகள் நோயினால் பலியாகிவருகின்றன [135]

### பாடசாலைக்கு நிதி ஒதுக்கீடு

(உடுவில்)

ஆசிய அபிவிருத்தி வங்கியினரால் நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலையின் திருத்தவேலைகளுக்கென இவ்வருடம் ஒரு லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இந் நிதியைக் கொண்டு கடந்தகாலங்களில் ஷெல் தாக்குதல்களால் சேதமாக்கப்பட்ட பாடசாலைக் கட்டடங்கள் திருத்தம் செய்யப்படும் எனவும் பாடசாலை எல்லைப்புற வேலிகள் பலப்படுத்தப்படும் எனவும் பாடசாலை அதிபர் இ. வல்லிபுரம் தெரிவித்தார், (109)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

### இலங்கை வங்கி கருமபீடம்

(பண்டத்தரிப்பு)

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு ஆலய வீதியில் இலங்கை வங்கியின் கருமபீடம் ஒன்றைத் திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

கிறுவர் சேமிப்பு சான்றிதழ் விற்பனை, சேமிப்பு கணக்கு ஆரம்பித்தல், நிலையான வைப்புக் கணக்கு ஆரம்பித்தல் போன்றவை இக்கருமபீடத்தில் பொதுமக்களின் நலன் கருதி இடம்பெற விருப்பகாக யாழ். இலங்கைவங்கி உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (72)

### போக்குவரத்து முற்றாகத் தடை

(மன்னார்)

தலைமன்னார்: பேசாலை, எருக்கலம்பிட்டியிலிருந்து இந்தியாவுக்கு படகுகள் மூலம் செல்வதும் அங்கிருந்து வருவதுமான போக்குவரத்துக்கள் தற்சமயம் மன்னார் விடுதலைப் புலிகளால் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

இத்தடையை மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுப்பதுடன் பிடிபட்ட பொருள்கள், படகு இயந்திரம் போன்றனவும் பறிமுதல் செய்யப்படுமென கடுமையான அறிவித்தல் சம்பந்தப்பட்ட இடங்களில் வழங்கப்பட்டுள்ளது. (85)


## சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் பணிமனை

### யாழ்ப்பாணம்.

1990ம் ஆண்டு யூன் மாதம் 11ம் திகதி காலை 10-00 மணி வரை சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் அவர்களால் கீழே குறிப்பிட்ட கட்டிட வேலைக்கு ரூபா 250,000/-க்கு மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினமே 10-30 மணியளவில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். அத்தருணம் ஒப்பந்தக்காரரோ அல்லது அவரது பிரதிநிதிகளோ சமுகம் அளிக்கலாம்.

இவ்வேலை செய்ய விரும்புவோர் எவரும் அரச கரும வேலை ஒப்பந்தக்காரராகவோ அல்லது உள்ளூராட்சி ஆணையாளரினால் அல்லது கூட்டுறவு உதவியாளரினால் அங்கீகரிக்கப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

இக்கட்டிட வேலைசெய்ய விரும்புவோர் 1990ம் ஆண்டு யூன் மாதம் 8ம் திகதி காலை 10-30 மணி வரை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பணிமனையில் கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம். திரும்பப் பெறக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 350/-ம், திரும்பப் பெறமுடியாத பணமாக ரூபா 50/-ம் காசுக் கட்டளை மூலம் செலுத்தி கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

### கிராமோதய சுகாதார நிலையம்

யாழ்ப்பாண மாவட்டம் — (1) ஆழியவளை
(2) கட்டைக்காடு
(3) புங்குடுதீவு (ஊரதீவு)

கேள்விகள் இணைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்ட பின் கடித உறையில் அடைக்கப்பட்டு மெழுகு சீல் வைப்பதுடன் கடித உறையின் இடதுபக்க மூலையில் ''சுகாதாரப் பகுதியின் கட்டிட வேலை'' என்று குறிப்பிட்டு மேற்கூறிய திகதிக்கு முன் இப்பணிமனையில் கிடைக்கத்தக்கதாக அனுப்பவேண்டும். அல்லது இப்பணிமனையில் வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் போடப்படவேண்டும். தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்கள் அவர்களுடைய கேள்விகள் ஏற்கப்பட்டதென்று அறிவித்தல் கிடைத்தவுடன் ஒரு வார காலத்திற்குள் நியமிக்கப்பட்ட வைப்புப் பணத்தை செலுத்துவதுடன் இதற்கான ஒப்பந்தத்திற்கும் உடன்படல்வேண்டும். அவ்வாறு செய்யத் தவறின் அவரது கேள்வி இரத்துச் செய்யப்படலாம்.

தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்கள், ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வித் தொகையின் 5% ஒப்பந்தத்தின்படி வேலையை திருப்திகரமாகச் செய்துமுடிக்க பிணைப்பணமாக யாழ்ப்பாண பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் நியமிக்கும் வங்கியில் கட்டவேண்டும். வேலை திருப்திகரமாக முடிந்த பின் இப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

கேள்வி விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுதல், எதையாவது நிராகரித்தல் அல்லது முற்றாக நிராகரித்தல் ஆகிய உரிமைக்கும், அனைத்து தீர்மானங்கள், இறுதி முடிவுகள் யாவும் கேள்விச் சபை தலைவரைச் சார்ந்தது.

ந. கனகசபை,
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

29 மே, 90. (ஏ 775)



யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## இரும்பு கேடர்களுக்கான கூறுவிலைகள்

உடைந்த நகர மண்டப கட்டிடத்திலும் மாநகர சபை அலுவலக கட்டிடத்திலும் உள்ள இரும்பு கேடர்களை (Girders) விலைக்கு விற்பதற்கான அரக்கு முத்திரை இடப்பட்ட கூறுவிலைகள் யாழ்ப்பாண மாநகர ஆணையாளரால் 1990ம் ஆண்டு ஆனி மாதம் 15ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வி. பி. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்.
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
30-05-90 (ஏ-777)



## அறிவித்தல்

### ஈ. வி. தளையசிங்கம் அன் கோ

பட்டயக் கணக்காளர்கள்

ஏ. எஸ். சங்கரப்பிள்ளை கட்டிடம், முதல் மாடி,
166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

மேற்படிஸ்தாபனத்தின் உரிமையாளர் காலஞ் சென்றதைத் தொடர்ந்து இந்த ஸ்தாபனத்தைச் சார்ந்த வாடிக்கையாளர்களின் சகல கோவைகளும், மற்றும் ஆவணங்களும், அதே முகவரியின் இரண்டாம் மாடியிலுள்ள இராசநாதன் இரவீந்திரவர்மன் அன் கோ (R. R. Varman & Co) பட்டயக் கணக்காளர் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் அனைத்து வாடிக்கையாளர்களையும் அவர்களைத் தொடர்பு கொள்ளுமாறும் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி விமலா தளையசிங்கம்
(சி-3927)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### விஞ்ஞான பீட கல்வியாண்டு - 1989/90

இரண்டாம், மூன்றும, நான்காம் வருட விஞ்ஞானபீட மாணவர்களுக்கான 1989/90ம் கல்வியாண்டு 25-06-90ம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

பதிவாளர்.
எ-776



வட்டு தொகுதி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் சங்கானை.

## பதவி வெற்றிடங்கள்

கிளை முகாமையாளர் தரம் - III

தகைமைகள்:-

I. கூ. வே. 14-வது சம்பளத் திட்டத்தில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது.

II. க. பொ. த. (சா. த) கணிதம். தமிழ் உட்பட 5 திறமைச்சித்தியுடன் 6 பாடங்களில் சித்தி.

சம்பள அளவுத் திட்டம்:-

302/13க்கு அமைவான புதிய சம்பளத் திட்டம்.

குறிப்பு: சங்க எல்லைப்பரப்புக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் 15-06-1990க்கு முன் தலைவர் வட்டு தொகுதி தெங்குபனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூ. சங்கம், சங்கானை என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
வ. தொ. தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம்
சங்கானை.
(சி-3926)

### வாழ்க்கைச் செலவு அலவன்ஸ்:

# மீண்டும் வழங்குவது பற்றி அரசு மீள் பரிசீலனை

[கொழும்பு]

அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுவந்த வாழ்க்கைச் செலவு அலவன்ஸை மீண்டும் வழங்குவது குறித்து அரசாங்கம் மீள்பரிசிலனை செய்துவருகிறது.

இந்த வாழ்க்கைச் செலவு அலவன்ஸ் பணத்தை வழங்குவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து விரைவில் அறிக்கை சமர்ப்பிக்கும்படி, பிரதமர் திரு. டி. பி. விஜயதுங்க, திறைச்சேரி உதவிக் காரியதரிசி திரு. எச். பி. திஸநாயக்காவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அரசாங்க ஊழியர்களுக்கு இவ் அலவன்ஸ் பணம் வழங்குவதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு தேவைப்படும் என்பதனை கணித்து, அறிக்கை சமர்ப்பிக்கும்படி தன்னை பணித்துள்ளதாக உதவிக்காரியதரிசி திரு. திஸநாயக்கா தெரிவித்துள்ளார். (அ)

# ‘மத்திய அரசிலிருந்து 'யாரும் கட்டளையைக் கொண்டுவரக்கூடாது’

[மட்டக்களப்பு]

''மத்திய அரசிலிருந்து யாரும் கட்டளைகளை கொண்டுவர முனையக்கூடாது. அப்படிச் செய்தால் மாகாணசபை இருந்து என்ன பயன்? மாகாணம் சிறப்படையவேண்டுமா? அல்லது தனியார் சிறப்படையவேண்டுமா? என்பதைச் சிந்திக்கவேண்டும்.''

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க மட்டக்களப்பு மாவட்டக் கிளையினர் அளித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்து உரையாற்றிய வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் திரு. ஈ. கே. சற்குணராசா கூறினார்.

ஆனைப்பந்தி மகளிர் மகாவித்தியாலய மண்டபத்தில், மேற்படி கிளையின் தலைவர் திரு. வி. த. குமாரசாமி தலைமையில் பாராட்டு விழா நடைபெற்றது.

தொடர்ந்து பேசிய அவர் கூறியதாவது:

''சகல அதிகாரங்களையும் கல்விப் பணிப்பாளர்களிடம் ஒப்படைத்துவிட்டேன். மாவட்ட இடமாற்றங்களைக் கூட என்னால் செய்யமுடியாது. சட்டத்தை மீறி எந்த உதவியும் செய்யப்படமாட்டாது. பதவியை நாம் பெருமைப்படுத்தவேண்டும்.

''அதிகாரிகளும், கொத்தணி அதிபர்களும் மதிப்பீடு செய்யப்படுகின்றனர். எதிர்காலத்தில் இதன் அடிப்படையிலேயே இடமாற்றம், பதவி உயர்வுகள் வழங்கப்படும். உங்கள் சங்கம் 10 கோரிக்கைகளை முன்வைத்திருந்தது. தமிழில் கருமம் ஆற்றவேண்டும் என்ற முதலாவது கோரிக்கையை உடனடியாகச் செயற்படுத்தி உள்ளோம். இப்போது காசோலைகளும் தமிழில் எழுதப்படுகின்றன.''

மட்டக்களப்பு கல்விப் பணிப்பாளர் திரு.கு.சோமசுந்தரம் பேசியதாவது: ''திரு.சற்குணராசாவுக்கு இப்பதவி கிடைத்தது குறித்துத் தமிழீழமே பெருமைப்படவேண்டும்.

''ஒரு தலைவன் பிழைவிட்டால் எல்லாமே பிழைத்துவிடும். அதிகாரிகள் கையொப்பம் இடுவதில் மட்டுமே வல்லவர்கள் என்ற நிலை மாறி, அவர்களுக்கும் திறமை உண்டு என்ற நிலை இப்போது ஏற்பட்டுள்ளது. நிருவாகிகள் குறிப்பறிந்து நடக்கவேண்டும். அத்தகைய ஒருவரே திரு.சற்குணராசா.''

இவ்விழாவில் திருமலை கல்விப் பணிப்பாளர் திரு. கே. தியாகராசா, உதவிக் கல்விப் பணிப்பாளர்களான திருவாளர்கள் கே. முத்துலிங்கம், க. மகாலிங்கம், எஸ். செபரெத்தினம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. கே. சோமசுந்தரம் உட்படப் பலரும் பேசினர். (121)

### காலம் கடந்த

# பிறப்பு, இறப்பு பதிவுக்கு ஆவணங்களும் தேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் காலம் கடந்த பிறப்பு, இறப்புக்களைப் பதிவு செய்வதில் தாமதம் ஏற்படுவதைத் தடுக்கும் மூகமாகத் தேவைப்படும் ஆவணங்களை விண்ணப்ப படிவத்துடன் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

காலங்கடந்த பிறப்பு, இறப்பைப் பதிவு செய்து கொள்ளுவதற்குப் பின்வரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டுமென்று கோரப்பட்டுள்ளது:

0 உதவி அரசாங்க அதிபரால் மேலொப்பமிடப்பட்ட கிராமசேவை அலுவலரின் அறிக்கை.

0 வைத்தியசாலையிலிருந்து பெற்றுக்கொண்ட கடிதம்.

0 உமது திருமண சான்றிதழ்.

0. பிறப்புச் சம்பந்தப்பட்டவருக்கு நேர் மூத்த, நேர் இளைய பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ்கள்.

0 பிறப்புச் சம்பந்தப்பட்டவரது கல்வி கற்ற பாடசாலையிலிருந்து பெற்றுக் கொண்ட கடிதம்.

0 பிறப்புச் சம்பந்தப்பட்டவரது தடுப்பூசி ஏற்றுதற்கான அட்டை.

0 பிறப்புச் சம்பந்தப்பட்டவரது சாதகக் குறிப்பு/ஞானஸ்தான சான்றிதழ்.

0 இறப்புச் சம்பந்தப் பட்டவரது பிறப்புச் சான்றிதழ்.

0 ரூபா40பெறுமதியானமுத்திரை (ரூபா 10 பெறுமதியான நான்கு முத்திரைகள்)

0 மரண விசாரணை நடைபெறவில்லை என்பது பற்றி மரண விசாரணை அதிகாரியிடமிருந்து பெற்றுக் கொண்ட கடிதம். (54)

# ஒரே தினத்தில் கடவுச்சீட்டு: நாளை முதல் அமுலாகிறது

[யாழ்ப்பாணம்]

ஒரே தினத்தில் கடவுச்சீட்டை பெற விரும்பினால் மேலதிக கட்டணமாக ரூபா 500 செலுத்திப் பெறலாம். இதற்கான திட்டமொன்று நாளை முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரவுள்ளதாக குடிவரவு குடியகல்வுத் திணைக்கள கட்டுப்பாட்டாளர் அறிவித்துள்ளார்.

அனைத்து நாடுகளுக்குமான கடவுச்சீட்டொன்றைப் பெறுவதற்குப் பொது சகல ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பத்துக்கு 1300 ரூபா செலுத்தப்படவேண்டும்.

இத்தொகையுடன் மேலும் 500 ரூபா செலுத்தினால் அதே நாளில் பிற்பகல் 3.30 க்குப் பின்னர் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம்.

இதேபோன்று மத்திய கிழக்கு நாடுகளுககான விண்ணப்பத்துடன் ரூபா 300 செலுத்தப்படவேண்டும். இதுதவிர மேலதிகமாக 500 ரூபாசெலுத்தினால் விண்ணப்பித்த தினத்தன்று பிற்பகலில் அதற்கான கடவுச்சீட்டு வழங்கப்படும்.

இந்த நடைமுறைகள் சரியான ஆவணங்களுடன் கூடிய விண்ணப்பங்களுக்கு மட்டுமே பொருத்தமுடையதாகும். (153)

### “அரசு - புலிகள் பேச்சுவார்த்தையில்

# ஏமாற்ற முனைந்தால் அது அரசுக்கே ஏமாற்றமாக முடியும்”- செங்கதிர்

(நெல்லியடி)

''ஸ்ரீலங்கா அரசுடன் நாம் நேர்மையோடும், நிதானத்தோடும், பலத்தோடுமே பேச்சுவார்த்தை நடத்திவருகின்றோம். இப்பேச்சுவார்த்தையில் எமக்கு நீதி வழங்காது அரசு ஏமாற்ற முனைந்தால், அது தங்களைத் தாங்களே ஏமாற்றியதாக முடிந்துவிடும்.''

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரதி அமைப்பாளரும், செயற்குழு உறுப்பினருமாகிய திரு. செங்கதிர், கரவெட்டியில் நடைபெற்ற இளம் புலிகள் வள்ளுவன், அருள் [பி. பி.] ஆகியோரின் முதலாண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வடமராட்சி கட்சி அமைப்பாளர் திரு. அரசண்ணை தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. செங்கதிர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

''எம்மை அழித்தொழிப்பதற்காக இந்தியா இராணுவத்தை இலங்கை அரசு அழைத்தது ஆனால் எமது வேங்கைகளின் வீரம் செறிந்த போராட்டத்தினாலும், மக்களின் பூரண ஒத்துழைப்பினாலும் இந்திய இராணுவத்தால் எம்மை வெல்லமுடியவில்லை. இந்நிலையில்தான் இலங்கை அரசு எம்மைப் பேச்சுக்கு அழைத்தது. எமது பிரச்சனைகளைப் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்ப்பதாக உறுதியளித்தது. இதன்படி இந்திய இராணுவம் இங்கிருந்து வெளியேற்றப்பட்டது. ஆனால் எஞ்சியுள்ள பிரச்சனைகள் இன்னும் தீர்க்கப்படாமல் ஒரு அரசியல் மந்தநிலை தோன்றியுள்ளது. இந்தநிலையை உடன் அகற்றி ஆவன செய்யவேண்டும்'' என்றார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வடமராட்சிப் பொறுப்பாளர் திரு. குணம் பேசுகையில் ''எமது தேசிய விடுதலைப்போராட்டம் இன்று ஓர் உன்னதமான நிலையில் இருக்கிறதென்றால் இதற்குக் காரணம் எமது தியாகிகளே. இந்தத் தியாகிகள் எந்த இலட்சியத்திற்காக வீரமரணம் அடைந்தார்களோ, அந்த இலட்சியத்தை வென்றடைய அனைவரும் முன்வரவேண்டும். அப்போதுதான் அந்த வீரர்களின் ஆத்மா சாந்தியடையும்'' என்றார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நெல்லியடிப் பிரதேசப் பொறுப்பாளர் திரு. குணபால் பேசுகையில் கூறியதாவது:

''எமது போராட்டத்தில் உயிர்நீத்த வீரவேங்கைகள் வாழவேண்டும் என்றோ அன்றி ஆழவேண்டுமென்றோ போராட்டத்தில் தங்களை அர்ப்பணிக்கவில்லை. இந்த மண்ணில் எமதுமக்கள் சுயநிர்ணய உரிமையுடனும், சுயகௌரவத்துடனும் வாழவேண்டுமென்பதற்காகவே போராடி உயிர்நீத்தார்கள். அவர்களின்பணியினை தொடர அனைவரும்முன்வரவேண்டும்'' என்றார்.

வடமராட்சி மக்கள் தொடர்பாளர் திரு. ஸ்ரனிலஸ் மாஸ்டர் பேசுகையில், “எமது போராட்டத்தில்அனைத்து மக்களும் கருத்துவேற்றுமைகளைக் களைந்து போராட முன்வரவேண்டும். அப்போதுதான் எமது இலக்கினை வெகு இலகுவாக வென்றடைய முடியும்'' என்றார்.

இவ் வைபவத்தில் வடமராட்சி கிழக்கு மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி லூசியா, கவிஞர் முருகு இரத்தினம் உட்பட பலர் பேசினார்கள். திரு.க. வல்லிபுரம் நன்றி கூறினார். [55]

### கூட்டுறவுப் பணியாளருக்கு

# ஊக்குவிப்பு பணம் வழங்கப்படவில்லை!

(யாழ்ப்பாணம்)

''நெருக்கடியான காலகட்டங்களில் பணிபுரிந்த கூட்டுறவுப் பணியாளர்களுக்கு ஊக்குவிப்புப்பணம் வழங்கப்படவில்லை. இராணுவ நடவடிக்கை இடம்பெற்ற நேரங்களில் சேவையுணர்வுடன் கடமைபுரிந்தவர்கள் இவர்கள்''.

இவ்வாறு யாழ்ப்பாணம் கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம் வடகிழக்கு மாகாண சபை கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு அனுப்பி வைத்திருக்கும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அந்தக் கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது; ''கடந்த காலங்களில் வன்செயலில் பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளத்தில் 50 வீதம் ஊக்குவிப்புப் பணமாக வழங்க வேண்டும் என்றும் அது மாதம் 500 ரூபாவுக்கு குறையாது இருக்க வேண்டும் என்று பொது நிர்வாக அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்ட சுற்று நிருபத்தின்படி ஊக்குவிப்புப் பணம் வழங்கப்பட்டிருக்கின்றது.

நெருக்கடியான காலகட்டத்தில் பணிபுரிந்த கூட்டுறவு ஊழியர்களுக்கு இருபதுக்கு மேற்பட்ட கூட்டுறவுப் பணியாளர்கள் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். கூட்டுறவு ஊழியர்கள் நெருக்கடியான நேரத்தில் இடம்பெறவிருந்த பட்டினிச்சாவுகளில் இருந்து பொது மக்களை மீட்டுள்ளார்கள்.

‘இப்படியான தியாக உணர்வுடன் கடமை புரிந்த கூட்டுறவுப்பணியாளர்களுக்கு ஊக்குவிப்புப் பணத்தை பெற்றுத் தருமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.'' இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. (152)

### மாகாண சபையின்

# பணிப்புரைகளை ஏற்க அம்பாறை கல்விப்பணிப்பாளர் மறுப்பு

[மட்டக்களப்பு]

அம்பாறை மாவட்ட கல்விப் பணிப்பாளர் வடகிழக்கு மாகாண சபையின் பணிப்புரைகளைப் புறக்கணித்து வருவதாகக் கூறப்படுகிறது.

பாதுகாப்புக்காரணங்களின் நிமித்தம் திருமலையில் நடைபெறும் மகாநாடுகளுக்கு வரமுடியாது என்றுகூறும் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த இவர் அனைத்து அலுவல்களுக்கும் மத்தியஅரசையே நாடுகிறாராம்.

மேலும் அம்பாறை மாவட்டத்தில் கடமையாற்றும் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஊழியர்களை தமிழ்ப்பகுதிகளுக்கு இடமாற்றம் செய்துவிட்டு அந்த இடங்களுக்கு பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தோர் பதிலாக நியமிக்கப்படுகின்றனராம்.

அம்பாறை மாவட்டத்திலிருந்து இடமாற்றம் பெற்றுவரும் மேற்படி சிறுபான்மை இனத்தவர்களை யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய தமிழ்ப் பகுதிகளில் ஏற்றுக்கொள்ள முடியாதாயினும் அவர்களை மீண்டும் அம்பாறைக்கு அனுப்பினால் அதனால் அவர்களுக்கு ஆபத்துஏற்படும் என்று கூறப்படுவதால் தமிழ்ப் பகுதிகளிலேயே மேலதிகமாக வைத்துக்கொள்ளப்படுகிறதாம்.

மத்திய அரசும் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் மாகாண சபைக்கு அதிகாரங்களைக் கொடுக்கவிரும்பவில்லை என்பதற்கு இது மற்றுமோர் உதாரணம் என்று மாகாணசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [121!

### மணிவாக்கு

''உனது பாதங்கள் நிலத்தில் பதியவேண்டும். ஆனால் உனது புகழோ வானம் வரை எட்டவேண்டும்''.

— டாக்டர் ராதாகிருஷ்ணன்

# நமது நோக்கு

## தூங்கற்க ...... தூங்காது செய்யும் வினை!

மக்களிடையே நம்பிக்கையின்மையும், அடுத்தது என்னவோ என்ற ஏக்க நிலையும் உருவாகிக்கொண்டிருந்த வேளையில்—

கொழும்பிலே, பேச்சுவார்த்தைகளைக் குழப்பியடிக்க, சில எதிர்க்கட்சிகள் வரிந்து கட்டிக்கொண்டிருந்த வேளையில்—

வேவு பார்க்கும் விமானங்கள் வட்டமிட்ட செய்திகள் வந்து கொண்டிருந்த வேளையில்—

கிழக்கிலே இராணுவ முகாம்கள் பலப்படுத்தப்படுகின்றன என்ற செய்திகள் வெளிவந்துகொண்டிருந்த வேளையில்—

தென்னிலங்கைப் பத்திரிகைகள் தேவையற்ற விதத்திற் செய்திகளை உருவாக்கியும், திரித்தும் வெளியிட்டுக் கொண்டிருந்த வேளையில்—

அமைச்சர் ஹமீது யாழ்ப்பாணம் வந்து போயிருக்கிறார்.

தலைவர்களைக் கண்டு பேசிச் சில உறுதிமொழிகளைக் கூறிச் சென்றிருக்கிறார்.

அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையில் ஓர் மந்த நிலை ஏற்பட்டிருந்தது; முறுகல் நிலை உருவாகியிருந்தது.

''தமிழ் மக்களின் அவநம்பிக்கையைப் போக்கும் வகையில உருப்படியாக எதையாவது செய்ய வேண்டும்; அது அரசாங்கத்தின் பொறுப்பு; சும்மா வீணே பேசுவதிற் பயனில்லை.'' இது விடுதலைப் புலிகள் முன் வைத்த இறுக்கமான, தீர்க்கமான கோரிக்கை.

''பேச்சுப் பல்லக்கு, தம்பி கால்நடை...!''- இந்த நிலை தொடருவதானால் எந்தவித நன்மையும் கிடைக்கப்போவதில்லை.

நாட்டின் பிரச்சனைகளை ஆராய்ந்து, முடிவெடுத்து மனத்திலே துணிவும் பெற்றபின், செய்யும் காலத்துச் செய்யாது விடுதல் குற்றமாகும் என்றுதான் வள்ளுவர் அறிவுறுத்தியிருந்தார்.

''சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிபு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது'' —குறள் 671

எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் இவைதான் எனத் தீர்மானித்தபின் காலந்தாழ்த்துவது தீதாகும் என்பது அவர் கருத்து.

உறுதிமொழிகளை அள்ளித்தந்து கொண்டு, காலத்தை இழுத்தடித்து அரசியல் இலாபம் காணலாமென்பது பதற்கனவாகவே முடியும்.

அமைச்சர் ஹமீது அரசின் நிலைப்பாட்டைத் தெளிவாக்கியிருக்கிறார்.

ஆறாவது சட்டத்திருத்தப் பிரிவை நீக்கக்கோரும் தீர்மானத்தைக் கொண்டுவரப் போவதாக ஈழவர் முன்னணி அறிவித்திருந்தது.

அரசே அத்தீர்மானத்தைக் கொண்டுவரும் என உறுதிமொழி அளிக்கப்பட்டிருக்கின்றது.

வடக்கு-கிழக்கு மாகாணசபை கலைக்கப்படும்; தேர்தலை மீண்டும் நடத்துவதற்கான திகதியும் நிர்ணயிக்கப்படும்.

இந்த உறுதிமொழிகள், நெருக்கடி நிலையை-பதட்ட நிலையை-அவநம்பிக்கையை-சற்றுத் தளர்த்த உதவும்.

மக்களின் உறுதிப்பாட்டையும், மக்கள் தலைவர்களின் நிலைப்பாட்டையும் அமைச்சர் நன்குணர்ந்திருப்பார்; அரசின் உயர் பீடத்திற்கு உடன் தெரிவித்திருப்பார்.

சொல்லிய வண்ணம் செய்ய, அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதுவே மக்களின் எதிர்பார்ப்பு!

(இன்று அகிலமெங்கும் புகைத்தலை நிறுத்தும் தினமாகும்.)

## வாழுவோம் மிளிர்வோம்

குறள் வெண்பா

புகைத்தலை மக்கள் புவியின்கண் போக்கின்
மிகைப் பயன் உண்டே; விடும்.

★

புகைத்தலால் அகில மக்கள்
பணஞ்சுகம் சிறப்பி ழந்து
நகைத்தலுக் காளாய் நித்தம்
நமனுக்கும் ஆளா கின்றார்;
புகைத்தலே இன்று தொட்டுப்
புவிதொறும் விட்டு ஞான்றும்
மிகைத்தலைப் பயனைப் பெற்று
வாழுவோம்; மிளிர்வோம் நாமே.

கவியரசு வெண்பாமணி முருககூருயன்

(இன்று புகைத்தல் தடுப்புத் தினம்)

# உயிருக்கு உலைவைக்கும் 'புகையை' தவிர்க்கமுடியாதா?

. உடலுக்கு ஊறுவிளைவிக்கும் புகைத்தலுக்கு ஆளாகும் குழந்தைகள் தொடக்கம் முதியோர் வரையுள்ள எண்ணிக்கை அதிகரித்துவருவதால் இதன் தீய விளைவுகளை விளக்கச் செய்து விழிப்புணர்ச்சி ஏற்படுத்தி ஆரோக்கிய வாழ்விற்கடிகோலுதலே இப் பிரகடனத்தின் நோக்கமாகும்.

அப்படியாயின் ஏன் மக்கள் புகைத்தலை விரும்புகிறார்கள் என்ற கேள்வி எழுகின்றது, இதற்கு பிரச்சனைகள், மன விரக்தி ஏற்படின் புகைத்தால் ஓர் சாந்தி ஏற்படுகின்றதெனப் புகைப்பிடிப்பவர்கள் கூறுகின்றனர், பிரச்சனைகளை மனத்திண்மையோடு சமாளித்து வெற்றிகாணும் திறனற்றவர்கள், பின்விளைவுகளை சிந்திக்காது சொல்லும் நொண்டிச்சாட்டாகும் இது.

''துன்பம் உறவரினும்
செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை''

என வள்ளுவப் பெருந்தகை கூறுகின்றார்.

''துன்பத்திலும் இன்பத்திலும் மனநிலை மாறாது. எவனொருவன் நெஞ்சுஉறுதியோடு முன்னேக்கிச் செல்கிறானே அவனே மனிதருள் மேம்பட்டவன்'' என்று பகவத்கீதை பறைசாற்றுகின்றது. புகைத்தலினால் அதிலுள்ள இரசாயனப் படிவங்கள் இரத்தத்திற் கலந்து, உடல் வெப்பநிலை. சுவாசம் விடும்வேகம், இரத்த அழுத்தம் ஆகியன அதிகரிக்கின்றது. நெஞ்சுலர்கின்றது. கண் புகைச்சல். பசியின்மை முதலியன விருத்தியாகின்றது. முதியோர் புகைப்பதினால் வீட்டில் குழந்தைகளும் இந்தப் புகையைச் சுவாசித்து வளர்ச்சி குன்றி மற்றும் நலிவுகளுக்கும் ஆளாகின்றனர்.

முதல் மனிதன் ஆதம் என்பவனே ஆசைக்கடிமைப்பட்டான் என்பது மனித வரலாறு. தூய பழக்கங்கள் ஒட்டிக்கொள்வது சுலபம் அகற்றுவது கஷ்டம் ''யாருடைய மனம் எதைக்கண்டும் ஆசைப்படாமல், அதிர்ச்சியடையாமல் இருக்குமோ அந்த மனதுக்குச் சொந்தக்காரன் இப்பிறவியிலேயே பிறப்பு இறப்பு இரண்டையும் வென்றுவிடுகிறான்'' என்று பகவத்கீதை கூறுகின்றது.

நாம் ஆரோக்கியமாக இருக்கவிரும்பினால் இதுகாறும் தெரிந்தோ தெரியாமலோ மேற்கொண்ட புகைத்தல் பழக்கத்தை இப்பிரகடனநாளாகிய மே மாதம் 31-ம் திகதி இன்று முதல் நிறுத்துவோம். இது கடினமாக இருப்பின் இதற்கோர் சுலபமான அணுகுமுறையுண்டு. அதுதான் திருமந்திரம் சொல்லும் அஷ்டயோக சித்திகளுள் ஒன்றும் பிராணுயாமம்.

''ஏறுதல் பூரகம் ஈரெட்டு
வாமத்தால்
ஆறுதல் கும்பம் அறுபத்து
நாலதில்
ஊறுதல் முப்பத்திரண்டதி
ரேசகம்
மாறுதல் ஒன்றின்கண்
வஞ்சமாமே.''

திருமூலர் இச்செய்யுள் வழியாக விளக்குவது இடக்கலையால் 16 மாத்திரைகளுக்கு மூச்சை உள்ளிழுத்து ஆறுதலடைய அடக்கி வைப்பது 64 மாத்திரைகள். இரேசகம் என்றால் வெளிவிடுவது 32 மாத்திரைகள்.

புகைத்தல் பழக்கமுள்ளவர்கள் தினமும்காலையில் 10முறை இதைச் செய்துவந்தால்புகைத்தலில் வெறுப்பேற்படுவதோடு இப்பழக்கங்கள் காரணமாக ஏற்பட்டுள்ள, உடல் நலிவுகளின்றும் துரிதமாக விடிவு பெறுவர் என்பது முக்காலும் உண்மை. உயிருக்கே உலைவைக்கும் இப்பழக்கத்திற்கு ஓர் விடிவு தோன்றும்.

தொகுப்பு:
க. கனகராசா

# மக்கள் கருத்து

## பட்டப்படிப்பு

தங்கள் 23-4-90ம் தேதி இதழின் முற்பக்கச் செய்தியின்படி சுமார் 12 ஆயிரம் மாணவர்கள் இம்மாதம் பல்கலைக் கழகங்களில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. இதை அடுத்து ஓர் அனுபவம் தோய்ந்த ஆசிரியத் தலையங்கமும் தீட்டப்பட்டது.

இச்செய்திதகுதியான மாணவர்களிடையில் ஓர் பரபரப்பை உண்டாக்கிவிட்டது. மாணவ சமுதாயத்தோடு ''பட்டம் விடுதல்'' எவ்வகையான பின்விளைவுகளை உருவாக்குமென்பதை அனுபவரீதியாகத் தெரிந்திருந்தும், அரசாங்கம் அறிக்கைகளை விட்டுக்கொண்டிருக்காது தற்போதைய நிலையைத் தெரியப்படுத்த வேண்டும்.

ஆ. மயில்வாகனம்.
கரவெட்டி.

## புதிய முகாமையாளர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் புதிய முகாமையாளராக திரு. பத்மநாதன் பொறுப்பேற்றுள்ளார். முன்பு கடமையாற்றிய முகாமையாளார் திரு. தியாகராசா வீதிவிபத்தில் மரணமானது தெரிந்ததே. (83)

## பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாவாவின் அருள் மொழி மணிகள்

(1) அன்பிலாக் கடமை-இழிவானது
அன்புடன் கடமை-விரும்பத்தக்கது
கடமையில்லா அன்பு-தெய்வீகமானது

(2) நீ ஒரு துளி கண்ணீர் உதிர்த்தால்
நான் உன் கண்களில் இருந்து நூறு
துளிகளைத் துடைப்பேன்.

(3) நாமஸ்பரணம் செய்யுங்கள். நாமம் மலைபோல்
பாவத்தையும் இடிபோல் துகளாக்கும்.

[இன்று திருக்கேதீச்சரத்தில் 4ம் திருவிழா]

## ஏனென்றும் புரியேனென் கேதீஸ்வரா!

ராகம்: சகாண தாளம்: ஆதி

பல்லவி

யாதொன்றும் அறியேனென் கேதீஸ்வரா-இது
ஏனென்றும் புரியேனென் கேதீஸ்வரா-எனக்கு
...(யாதொ...)

அனுபல்லவி

விரும்புவதொன்றானல் விளைவது வேறாக
இருப்பது ஏனையா? ஒருபதில் கூறையா!
...(யாதொ...)

சரணம்

திளைப்பதும் இளைப்பதும் உன்னருள் தானையா!
முளைப்பதும் முதிர்வதும் உன்னருட் கூறையா!!
நினைப்பதும் நிகழ்வதும் உன்னருட் பேறையா!
அனைத்தும்உன் அருளையா! அருள்வதுன் கடனையா!]
...(யாதொ...)

-'முருகு'

# பலதும் பத்தும்

## அவருக்குக் கௌரவம் எதற்காக...?

சங்கானை மேற்கில் ஓர் பாடசாலை...... சிற்றம்பலம் வித்தியாசாலை...... அண்மையில் அங்கு இல்ல விளையாட்டுப் போட்டி நடந்திருக்கிறது...!

பண்டத்தரிப்புக் கோட்டக் கல்வியதிகாரி உட்படப் பல விருந்தினர்கள் கலந்து கொண்டார்கள்.

அங்கு... அந்த நிகழ்ச்சியின்போது... 90 வயதுடைய முதியவர் ஒருவர் கௌரவிக்கப்பட்டிருக்கிறார்...!

ஏன்... எதற்காக...?

'இந்துபோர்ட்' இராசரத்தினம் தலைமையில்...... சைவவித்தியா அபிவிருத்திச் சங்கம் கிராமங்கள்தோறும் சைவப் பாடசாலைகளை ஆரம்பித்ததல்லவா...?

அந்தவேளை... இந்த முதியவர்... தாமாகவே முன்வந்து பாடசாலை ஒன்றை ஆரம்பிக்கப் பன்னிரண்டு பரப்புக் காணியைக் கையளித்திருக்கிறார்.

குழந்தைச் செல்வம் இல்லாத இவர் பல குழந்தைகளின் கல்விச் செல்வத்திற்கு வழிவகுத்திருந்தார்...!

பாடசாலை 17-1-59 ல் ஆரம்பிக்கப்படபோது... . . இந்த முதியவரின் தாய் வழிப் பேரனாரின் பெயரே பாடசாலைப் பெயரானது.

நீண்டகாலமாகக் கீரிமலை மடத்திலே கந்தபுராணப் படிப்பிலும் ஈடுபட்டிருந்த இந்த முதியவர் யார்...? திரு. நா. சிதம்பரப்பிள்ளையே...!

இன்று... திரைகடல் ஓடியும் திரவியம் தேடுவோர்கள்... பாடசாலைகளின் அபிவிருத்திக்கும் சற்றுக் கைகொடுத்தாலென்ன...!

வாணி

“இழந்த உரிமைகள் மட்டுமல்ல

# புதிய பல உரிமைகளையும்

## தொழிற்சங்கம் பெற வேண்டும்”

(உடுவில்)

“இலங்கையில் தொழிற்சங்கச் செயற்பாடுகள் பல சிக்கல்களையும் இடைஞ்சல்களையும் எதிர்நோக்கியுள்ளன, அப்படி இருந்தும் ஆசிரியர்களின் நலன்களை பேணுவதிலும் ஆசிரியர்களுக்காக குரல் கொடுக்கக் கூடியதுமான ஏகபோக உரிமையை கொண்டு விளங்குகின்றது. இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம். மிகவும் கண்ணும் கருத்துமாக ஆசிரியர்களையும் அவர்களின் நலன்களையும கண்காணித்து வரும் இச்சங்கத்தின் செயற்பாடுகள் பாராட்டுக்குரியவை.”

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்ட வருடாந்த பொதுக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்ப்பாணம் கல்வித்திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. அ தங்கராசா இவ்வாறு கூறினர்.

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு திரு. சி. தார்சீசியஸ் தலைமை வகித்தார்.

தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ் மாவட்ட முன்னாள் தலைவர் திரு. த. வின்சென்ட், செயலாளர் திரு. சி. சிவபாலசிங்கம், பொருளாளர் திரு. பொ. குலசிங்கம் ஆகியோரின் சேவைகளை பாராட்டி பலரும் உரையாற்றினர்.

பிரதம கல்வி அதிகாரி திரு. அ. தங்கராசா கூறியதாவது; தொழிற்சங்க வளர்ச்சியில் தலைமைத்துவ பண்புதான் முக்கிய பங்கினை வகிக்கின்றது. ஏனைய தொழிற்சங்கங்களை விட இவ்வாசிரியர் சங்கம் சற்று வேறுபட்டதாக கருதப்படுவதற்குக் காரணம் சமுகத்தின் ஆதரவை பெற்றுக் கொண்டமைதான்.

தொழிற்சங்க நடவடிக்கைகள் மூலம் மாணவ உலகுக்கு பாதிப்பு ஏற்படாத முறையில் தமது பிரச்சனைகளை கலந்துரையாடி பேசித்தீர்த்துக் கொள்கின்றார்கள்.

ஆசிரியர்களின் உரிமைகளை பெற்றுக் கொள்ள முனையும் போது பொதுமக்களிடையே தமக்கு சார்பான அபிப்பிராயங்களை திரட்டிக்கொள்ளும் திறமையும் முகாமைத்துவமும் நீண்டகால அனுபவமும் மிக்க தொழிற்சங்கவாதிகளின் சேவையால் இச்சங்கத்துக்கு கிடைக்கின்றது. ஆசிரியர்களின் இழந்த உரிமைகளுக்காக மட்டுமல்ல: புதிய பல உரிமைகளை பெற்றுத்தரவும் இத்தொழிற்சங்கம் முயல வேண்டும்.

கடந்த ஏழு ஆண்டுகளாக எம்மை பலவிததொல்லைகளும் சூழ்ந்திருந்த போதிலும் இத்தொழிற்சங்கத்தின் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடையவில்லை. தொழிற்சங்கத்தின் சிறந்த முகாமைத்துவமும் வழிகாட்டலும் தான் இச்சங்கம் வலிமை பெற்று விளங்கக் காரணமாகின்றது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. சு. மகாசிவம் சிறப்புரை வழங்குகையில் கூறியதாவது:

எமது தொழிற்சங்கத்தின் கீழ் உள்ள 24 கிளைகளுள்ளும் உயிருடன் இருந்து தொழிற்படும் சங்கம் இதுதான். இதன் முதுகெலும்பாக விளங்கிய திரு சிவபாலசிங்கத்தின் கடமை உணர்ச்சி. நேர்மை, முகாமைத்துவம் ஆகியன தான் இதன் உறுதியான நிலைப்பாட்டுக்குக் காரணம்.

இச்சங்கத்தின் சீரிய யாப்புக்கள் சரியான முறையில் செயற்படுத்தப்பட்டு வருகின்றன கடந்த வன்செயல்களின் போது வடபகுதிக்கு அப்பால் செல்ல முடியாத ஆசிரியர்களுக்கு தற்காலிக இடமாற்றம் பாடசாலை ஆகியவற்றை பெற்றுக்கொடுத்து அவர்களுக்குஉதவியதுஎமதுதொழிற்சங்கம் தான்.

யாழ்ப்பாண மாவட்டபதில் செயலாளர் திரு. அ. தற்பரானந்தன் மற்றும் பொ. குலசிங்கம், திரு. சி. சிவபாலசிங்கம் ஆகியோரும் உரையாற்றினர்.

யாழ்ப்பாண மாவட்ட பிரசாரச் செயலாளர் திரு. ந. சிவபாதம் நன்றி கூறியதை தொடர்ந்து புதிய நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றது,

‘இது’ ஒரு தொடர்கதை

# 9 வருடங்களாகியும்

## நிரந்தர நியமனம் இல்லை!

[மானிப்பாய்]

யாழ். செயலகத்திலும் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களிலும் பணிபுரியும் அலுவலக ஊழியர்களுக்கு கடந்த 9 வருடங்களாகியும் நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகிறது.

இவ் அலுவலகங்களில் சுமார் 50 அலுவலக ஊழியர்கள் அமைய அடிப்படையிலேயே பணியாற்றி வருகின்றனர்.

இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க கடந்த பெப்ரவரி மாதம் 15-ம் திகதி திருகோணமலைக்கு வருமாறு வடக்கு கிழக்கு மாகாணசபையின் உள்துறை அமைச்சு அழைப்பு விடுத்து நேர்முகப் பரீட்சைக்கும் சென்று வந்துள்ளனர்.

ஆனல் இதுவரை இவர்களுக்கு எதுவித அறிவித்தலும் கிடைக்கவில்லை.

இதுசம்பந்தமாக மேற்படி ஊழியர்கள் யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட்டிடம் கடந்தமாதம் தமது நிலையை எடுத்துக்கூறி மகஜர் ஒன்றும் சமர்ப்பித்திருந்தனர். அம் மகஜருக்கு தாம நடவடிக்கை எடுப்பதாக அரச அதிபர் உறுதிமொழி வழங்கியுள்ளாரென தெரிவிக்கப்படுகிறது.

இவ் அலுவலகங்களில் பணிபுரியும் சுமார் 14 அலுவலக ஊழியர்களை தரம் மூன்றிலிருந்து தரம் இரண்டுக்கும் தரம் இரண்டிலிருந்து தரம் ஒன்றுக்கும் பதவி உயர்த்துவதற்காக உள்நாட்டலுவல்கள் அமைச்சு கடந்த ஆகஸ்ட் மாதம் கொழும்புக்கு அழைத்து நேர்முகப்பரீட்சை நடத்தியும் இதுவரை இவர்களின் பதவிஉயர்வுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்படவில்லையென்றும் கூறப்படுகின்றது. (71)

## விபத்து

(நெல்லியடி]

கரவெட்டி மூத்தவிநயகர் ஆலயத்திற்கருகாமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மபயணிகளை ஏற்றிவந்த மினிவான் ஒன்றும், மோட்டார் சயிக்கிளும் மோதியதில் சைக்கிளில் வந்த இருவரும் பலத்த காயத்திற்குள்ளாகி மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

துன்னாலையைச்சேர்ந்த செல்லர் செல்வராசா [வயது 34) குழந்தைவேலு குணசேகரம் (வயது 34) என்போரே காயமடைந்தவர்களாவர். இவர்களுடன் மினிவானின் வந்த பெண்மணி ஒருவரும் காயமடைந்துள்ளார். (]55

இ. போ. ச. மக்கள் மயம்

# ரூ. 10 லட்சம் டாலர்

## தொழில் நுட்ப உதவி

(கொழும்பு)

மக்கள் மயப்படுத்தும் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 10 லட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான தொழில் நுட்பஉதவி கிடைக்கவுள்ளது.

ஒவ்வொரு பஸ் டிப்போக்களும் வரையறுக்கப்பட்ட கம்பணிகளாக மாற்றியமைக்கப்படும் என்றும், மக்கள் மயப்படுத்தப்படும் இ. போ. சபை தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மேற்பார்வை செய்யும் என்றும் போக்குவரத்து அமைச்சர் திரு. விஜயபால மெண்டிஸ் தெரிவித்துள்ளார். (அ)

“சிறிய முதலீட்டுடன்

# புனர்வாழ்வு அளிப்பது

## முக்கிய திட்டமாகும்”

(யாழ்ப்பாணம்)

“யாழ்.மனித முன்னேற்ற நிலையத்தின் விரிவுபடுத்தப்பட்ட திட்டங்களுள் சிறிய முதலீட்டுடன் புனர்வாழ்வு அளிப்பது ஓர் முக்கிய திட்டமாகும். இத்திட்டத்தின் செயல் முறைகள் பல கோணங்களிலும் பாதிப்புக்குள்ளான தொழிலாளர்களுக்கும், வறியவர்களுக்கும் விதவைகளுக்கும் உதவியுள்ளமையை அவதானிக்கமுடிகின்றது.”

இவ்வாறு யாழ்.மனித முன்னேற்ற நிலைய அதிபர் அருட்திரு.எம்.ஜி பயஸ் அடிகளார் ஈழநாடுக்குத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

“இந்த நிலையம் ஆரம்பித்துள்ள இத்திட்டத்தினைப் போன்று பல்வேறு ஸ்தாபனங்களும், புனர்வாழ்வு நிறுவனங்களும், அரசினர் நிறுவனங்களும் பல கைத்தொழிற்திட்டங்களை அறிமுகப்படுத்தி உள்ளன. இத்திட்டங்களை எமது மக்கள் சரியான முறையில் பயன்படுத்த இதற்கான அறிவைவையும், அனுபவங்களையும், விபரங்களையும் பெற்றுக் கொள்ளுவதற்கு இலங்கையின் தென்பகுதியில் அமைந்திருக்கும் வசதிகளையும், வாய்ப்புக்களையும் போன்று இங்கும் பல திட்டங்களை அமுல்படுத்த வேண்டியதை மனித முன்னேற்ற நிலையம் தனது கவனத்தில் கொண்டுள்ளது.

“இதனைக்கருத்திற் கொண்டே மனித முன்னேற்ற நிலையம் தனது செயலகத்துடன் தொடர்புடையதாக இயங்கும் நூல்நிலையத்தில் ஒருபகுதியைக் கைத்தொழிலாளர்களின் தேவைகளுக்காக ஒதுக்கி உள்ளது.

“இந்த நூல்களின் உதவியுடன் நூற்றுக்கணக்கான சிறுகைத்தொழிற்துறைகளை ஆரம்பிக்கத்திட்டமிட்டுள்ளவர்கள் பயன் பெறலாம். அத்துடன் பாரிய தொழில் நுட்பங்களைக் கற்கவேண்டியவர்களுக்குப் பிரயோசனமான நூல்களையும் காணக்கூடியதாக உள்ளது.

“அரசாங்கத்தின் கைத்தொழில் நடைமுறைகளுக்கு முக்கிய பங்கேற்கும் கைத்தொழில் அபிவிருத்திச்சபை வெளியிட்டிருக்கும் ஐம்பதுக்கும் மேற்பட்ட புதிய தொழில்களை ஆரம்பிப்பதற்கான வேலைத்திட்டங்களும் இடம் பெற்றுள்ளன”. (54)

## தற்கொலை

(புங்குடுதீவு)

வாழ்க்கையில் ஏற்பட்ட விரக்தி தாங்கமுடியாத ஐந்து பிள்ளைகளின் தந்தை ஒருவர் இயக்கச்சியில் நஞ்சருந்தி உயிரை மாய்த்துக்கொண்டார்.

புங்குடுதீவு பத்தாம் வட்டாரத்தைச் சேர்ந்த ம. பாலசுப்பிரமணியம் என்பவரே இறந்தவராகும். இவர்புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். (101)

# ‘கற்பிப்பதில் புதிய யுக்திகளை கடைப்பிடிக்கவேண்டும்’

## -யாழ். கல்விப்பணிப்பாளர்

(உடுவில்)

“நவாலி கொத்தணியைச் சேர்ந்த எந்தப் பாடசாலையிலும்- மூலாதாரப்பாடசாலையிலும் கூட மாணவர்கள் உயர் கல்விபெறக் கூடியதான க. பொ. த. உயர்தர வகுப்புக்கள் இல்லாதிருப்பது பெரும் குறைபாடாகும். இதனை நீக்க நவாலி மகாவித்தியாலயத்தில் க, பொ. த. உயர் வகுப்புக்கள் விரைவில் அமைக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்.”

இவ்வாறு யாழ்ப்பாணம் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் கூறினர்.

நவாலி கொத்தணி பாடசாலைகளின் ஆசிரியர் தினமும், பாராட்டு விழாவும் நவாலி மகாவித்தியாலயத்தில் நடைபெற்றபோது கல்விப் பணிப்பாளர் திரு. திரு. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினர்.

நவாலி கொத்தணி அதிபர் திரு. ஐ. மனோகரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கொத்தணி உபதலைவர் திருமதி பா. கந்தசாமி வரவேற்புரை நிகழ்த்தினர்.

கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் உரையாற்றுகையில் கூறியதாவது; மனம், வாக்கு, காயம் என்பவற்றுக்கு பிழைவிடாது தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளுக்கு நல்வழிகாட்டி முன்னெடுத்து செல்லும் எந்த ஆசிரியர்களும் பாராட்டப்படவேண்டியவர்களே.

ஆசிரியர்கள் எல்லோரும் என்றும் கற்பவர்களாக இருக்கின்றார்களா என்பது இன்றைய கேள்வி. ஆசிரியர்கள் புதியனவற்றைக் கற்க வேண்டும். கற்பித்தலில் புதிய யுத்திகளைக் கடைப்பிடிக்க வேண்டும். தாய்பிள்ளைக்கு பராக்குக்காட்டி உணவூட்டுவது போல கடினமான விடயங்களை மாணவருக்கு இலகுவில் விளக்கக் கூடியதாக இருக்க வேண்டும். கற்பித்தல்ல் ஓர் கவர்ச்சியை ஏற்படுத்த வேண்டும்.

பாடசாலைகளில் கற்பித்தல் குறைவு கண்டவுடனே தான் மாணவர்கள் தனியார் கல்விக் கூடங்களை நாடுகின்றனர். இந்த நிலைமாறி பாடசாலைக் கற்பித்தலில் பூரண நிலை ஏற்படவேண்டும். பாடசாலைக் கல்வி சிறப்பாக அமைந்தால் மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களை நாடத் தேவையில்லை.

மாணவர்கள் பரீட்சையை மையாமாகக் கொண்டே கல்விபயில்கின்றனர். பாடக் குறிப்புக்களை பாடமாக்கி பரீட்சை எழுதுகின்றனர். கல்வியினைக் கற்று, கற்றவற்றை உணர்ந்து அதன்படி ஒழுக வேண்டும். தமது வாழ்க்கைக்கேற்ப பண்பு நிறைந்த கலாசாரமுடைய கல்வியைப் பயில வேண்டும். பாடசாலைக் கல்வியின் மூலம்தான் ஒரு மாணவன் முழு மனிதனுகின்றுன்.

நாகரிகத்துக்கு அடிபணியாமல் நமது பண்பாடு, கலை, கலாச்சாரங்கள் கடைப்பிடிக்கப்படவேண்டும். வெளிநாட்டு மவலைவாய்ப்பு மோகத்தால் எமது பாரம்பரிய சொத்துக்களை அழியவிடக்கூடாது.

(7-ம் பக்கம் பார்க்க)

# தொடரும் விபத்துக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் இடம் பெற்ற வாகன விபத்துக்களினுல் ஒருவர் பலியானதுடன் எட்டுப் பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கொழும்புத்துறை, சுன்னுகம், யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் நேற்று இடம்பெற்ற விபத்துக்களினுல் பி. யோசேப் (56 வயது) இளவாலை, செல்வி அபிரா இராசரத்தினம் (7 வயது) மயிலணி, ரி. தியாகராசா (45 வயது) யாழ் வீதி, துரையப்பா உதயகுமார் (42 வயது) பொன்னுலை ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

சாவகச்சேரி உரும்பிராய். யாழ். ஆஸ்பத்திரி வீதி ஆகிய இடங்களில் நேற்றுமுன்தினம் இடப்பெற்ற விபத்துக்களில் சின்னத்துரை சிறீதரன் (25 வயது) மந்துவில் சிவராசா சுரேஷ்குமார் (9 வயது) உரும்பராய். வண்ணமணிநாதன் (38 வயது) கொழும்புத்துறை ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

இதேநாளில் நெல்லியடியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் பலியானதுடன் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இவ் விபத்தில் செல்லன் செல்வராசா (32 வயது) துன்னலை) என்பவர் இறந்துள்ளதுடன், கு. குணசேகரம் (34 வய்து துன்னுலை) என்பவர் காயமடைந்துள்ளார்:

### பூநகரியில் ஒருவர் காயம்

இதேவேளை பூநகரியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பூநகரி நல்லூரைச் சேர்ந்த எஸ். சின்னராசா 42 வயது என்பவர் காபமடைந்துள்ளார்.

காயமடைந்த அனைவரும் யாழ் ஆஸ்பந்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் (56)

# அரச அதிபர் அபிவிருத்தி வேலைகளைப் பார்வையிட்டார்

[சித்தன்கேணி]

யாழ் அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி வேலைகளை நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

சித்தன்கேணி மாதர் கி. மு. சங்கத்தினரால் நடாத்தப்படும் தையல் பயிற்சி நிலையம், சுழிபுரத்தில் புதிதாக அமைக்கப்படும் உதவி அரசாங்க அதிபர் பணிமனை சுளிபுரம், மூளாய், பொன்னாலை ஆகிய இடங்களில் ஐ. நா. அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் வீடுகள் குழாய்க்கிணறுகள் ஆகியவற்றை உதவி அரசாங்க அதிபர் திரு து. வைத்திலிங்கத்துடன் சென்று அவர் பார்வையிட்டார். (137)

# இந்திய வம்சாவழியினரின் விண்ணப்பங்கள் பரிசீலனை

[யாழ்ப்பாணம்]

நுவரெலியா தேர்தல் மாவட்டத்தில் இந்திய வம்சாவழியினர் தங்களை வாக்காளர்களாக பதிவு செய்வதற்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பான விசாரணைகள் வடக்கு-கிழக்கு மாகாணங்களைசேர்ந்த உதவித் தேர்தல் ஆணையாளர்களால் நுவரேலிய தேர்தல் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டன.

தேர்தல் ஆணையாளரின் பணிப்புரையைத் தொடர்ந்து கடந்தவாரம் இம்மாவட்டத்திலுள்ள தோட்டப்பகுதிகளுக்கு உதவி தேர்தல் ஆணையாளர்கள் விஜயம் செய்து தேவையான விசாரணைகளை நடத்தி வாக்காளர்களாக பதிவு செய்வதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுத்தார்கள்.

நுவரெலியா மாவட்ட வாக்காளர்கள் நுவரெலியா மஸ்கேலியா தேர்தற் தொகுதி, வலப்பனை, ஹங்குரன்ஹெற்ற, கொத்மலை தேர்தற்தொகுதிகளின் கீழ் வாக்காளர்களாக பதியப்பட்டுள்ளார்கள்.

யாழ். உதவி தேர்தல் ஆணையாளர் திரு. எம். சீ. அருந்தவச்செல்வம், வன்னி உதவி தேர்தல் ஆணையாளர் திரு. எம். திருநாவுக்கரசு, மட்டக்களப்பு உதவி தேர்தல் ஆணையாளர் திரு. வி சண்முகம், திருகோணமலை உதவி தேர்தல் ஆணையாளர் ஜனுப். எஸ். செய்னுதீன், கொழும்பு உதவி தேர்தல் ஆணையாளர் ஜனுப் எம். ஐ. எம். சலீம் ஆகியோர் இந்த விசாரணைகளை மேற்கொண்டார்கள். [153]

### "அக். 19 முதல் 24வரை

# உலக உயிர் பாதுகாப்பு வாரமாக பிரகடனம் செய்க"

## ஐ. நா. சபைக்கு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டு அக்டோபர் மாதம் 19ம் திகதியில் இருந்து 24ம் திகதி வரை உலக உயிர் பாதுகாப்பு வாரமாகப் பிரகடனப்படுத்தும்படி ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரை யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை கோரியுள்ளது.

இக் கோரிக்கையின் பிரதிகள் உலக நாடுகளில் உள்ள சகல சமய சமூக நிறுவனங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. நல்லூர் திருஞான சம்பந்த ஆதீன குருமகா சந்நிதானத்தின் அருளாணைப்படி இவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவர் திரு. வே. கே. தனபாலனும், பொதுச் செயலாளர் திரு. இ. கோபானும் அறிவித்துள்ளனர்.

ஐ. நா. சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கோரிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:—

"உலக அமைதிக்கு உயிர்ப் பாதுகாப்பு அவசியமாகும். இதுவே உலக மக்கள் மத்தியில் நிலையான அமைதிக்கு வழிகாட்டுவதாகும். உலக சமயங்கள் யாவும் உண்மைப் பொருளை வெளிப்படுத்தியதினால் உண்டான அமைதியும், வளர்ச்சியும் பகுத்தறிவாளராகிய மக்களை நல்வழிப்படுத்தும் வழிகாட்டிகளை உருவாக்கின.

இதனால் வளர்ச்சி கண்ட மனிதசமுதாயம் தகாதமுறைகளைப் பின்பற்றும்போது அவலமாகவும் அமைதியற்றும் வாழ நேரிடும்.

வாழவேண்டி நேரிடுகின்றது. இந்துசமயக் கருத்துக்கள் அகண்டமாக மக்களை வழிப்படுத்தும் நிலையில் முதன்மை உடையதாகவும் பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமயங்களுக்கு முன்னோடியாகச் சிந்துவெளிக் கலாச்சாரச் சிறப்பை வெளிப்படுத்தியதினால் உலக அமைதிக்கு வித்திட்டது.

உலக உயிர் பாதுகாப்பு வாரத்தில் உலக மக்கள் யாவரும் தாவர உணவுகளை உட்கொள்வதுடன் உயிரினங்களின் மாமிச உணவுகளை நிறுத்துமாறு அன்பாக வேண்டுகின்றோம் உலக மக்களின் சுக வாழ்வுக்குத் தாவர உணவும், பால் உணவும் அவசியமாகும். எனவே உலகில் கொல்லக்கூடாத விலங்கினமாகப்பசுக் கூட்டத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

"உலகில் தோன்றியுள்ள அமைதியின்மையை அகற்றி அமைதியை ஏற்படுத்தவும், உயிரினத்தைப் பாதுகாக்கவும் ஐக்கிய நாடுகள் சபை அக்டோபர் 19-24ம் திகதி வரை உலக உயிர்பாதுகாப்பு வாரமாக உலக மக்களுக்கு அறிவிக்கவேண்டும்." (54)

# இந்து சமயப் போட்டி:

## மகாஜன மாணவர்கள் வெற்றி

(மானிப்பாய்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட இந்து சமயப் போட்டியில், தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மாணவ மாணவிகள் வெற்றியீட்டியுள்ளனர்.

இப்போட்டி மாவட்ட ரீதியிலும் அகில இலங்கை ரீதியிலும் நடாத்தப்பட்டது.

மாவட்ட ரீதியில் பரிசுபெற்றவர்களுக்கு கடந்த 26ம் திகதி கொழும்பு விவேகானந்த மகா வித்தியாலய மண்டபத்திலும் அகில இலங்கை ரீதியில் பரிசு பெற்றவர்களுக்கு மறுநாள் 27ம் திகதி பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்திலும்பரிசில்கள் வழங்கப்பட்டன.

அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றவர்களுக்கு அமைச்சர் சௌ. தொண்டமான் தங்கப்பதக்கம் வழங்கி கௌரவித்தார்.

விபரம் வருமாறு; மேற்பிரிவு கட்டுரை; செல்வி ஏ. வானதி, மேற்பிரிவு, பண்ணிசை; செல்வி பி. சிவரதி, மத்திய பிரிவு கட்டுரை: செல்வி ச. சௌந்தகி, மத்திய பிரிவு நாவன்மை: செல்வன் மு. சதீஸ்பாலமுரளி, கீழ்ப் பிரிவு கட்டுரை: செல்வன் ந. மகேஸ்வரன் கீழ்ப்பிரிவு பண்ணிசை; செல்வி ம. லதாங்கி,

இவர்கள் அனைவரும் தெல்லிப்பளை, பன்னாலை, விழிசிட்டி கிராமங்களைச் சேர்ந்தவர்கள்.

ஏற்கனவே கீரிமலை சிவநெறி கழகத்தால் நடாத்தப்பட்ட பல போட்டிகளில் யாழ். மாவட்டத்தில் பல பரிசில்களை தமதாக்கிக் கொண்ட இவர்கள் மகாஜனவைச் சேர்ந்த திரு. விநாயகரின் ஆதரவுடன் அகில இலங்கையிலும் புகழீட்டி தமது கிராமத்திற்கும் கல்லூரிக்கும் பெருமை சேர்த்துள்ளார்கள். [71]

## இராசி பலன்

வியாழக்கிழமை

31 - 05 - 1990

மேடம்; சுபச்செய்தி, அபிப்பிராய பேதம். பெரியோர் உதவி, யோசனை.

இடபம்: வீண் விரயம், நீசர் உதவி உழைப்பு, தொழிற்சிந்தை.

மிதுனம்; உடல் உபாதை. மறதி. புதிய திட்டம், பணச் சிந்தை.

கடகம்; செல்வாக்கு, வாகனசுகம், அலைச்சல், ஆடம்பரம்.

சிங்கம்; தொழிலிட உதவி. ஆலய தரிசனம், சாஸ்திர விருப்பு, மறதி.

கன்னி: கடன்வரவு, மறதி, குடும்ப சுகம், வெற்றி.

துலாம்; காரிய தாமதம், வாக்குச் சிறப்பு, பணவரவு, உதவிகள்

விருச்சிகம்: வீண்தொல்லை. அயலவர் உதவி, கற்பனை, பெரியவர் உதவி.

தனுசு:கலகலப்பு,உபாதை, கடின வாக்கு, பணவரவு.

மகரம்: ஆடம்பரம், செல்வாக்கு வசீகரம், சமூகசேவை.

கும்பம்; நீசர் நட்பு, சாஸ்திர விருப்பு, மறதி, கடன்.

மீனம்: பணவரவு, தடை, வாகன சுகம், செல்வாக்கு.

இ. மகாதேவா

### 68-வது சர்வதேச கூட்டுறவு விழா

## யாழ். மாவட்டத்தில் கலாசார விழா

# போட்டிகள் நடத்த ஏற்பாடு!

(யாழ்ப்பாணம்)

1990 ஜூலை மாதத்தில் நடைபெறவுள்ள 68-வது சர்வதேச கூட்டுறவுத் தின விழாவையொட்டி யாழ். மாவட்டக் கூட்டுறவுச்சபை, கலை, கலாசார நிகழ்ச்சிகளையும் போட்டிகளையும் மாவட்ட மட்டத்தில் ஆகஸ்ட் மாத முற்பகுதியில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்துவருகின்றது.

இந்த ஆண்டு கூட்டுறவுத் தினவிழாவின் கருப்பொருளாக "கூட்டுறவு ஸ்தாபனங்களை அழகுபடுத்துவோம்" என்ற விடயத்தை தெரிவு செய்துள்ளது.

ஜூலை மாதம் 7ம் திகதியில் இருந்து ஒருவாரத்துக்கு கூட்டுறவு வாரத்தைக்கொண்டாடவுள்ளது. இககூட்டுறவு வாரத்தை ஒட்டி கொடித்தினம் ஒன்று நடைபெறவிருக்கிறது.

இக்கொடி விற்பனை மூலம் கிடைக்கும்நிதியைக்கொண்டு மகளிர் குழுக்கள் முயற்சி மூலம் வருமானம் பெறக்கூடிய பயிற்சிகளையும்,யாழ்ப்பாணம் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியின் வசதிகளையும் அதிகரிப்பதற்கும் எண்ணியுள்ளதாக தெரியவருகிறது.

இந்த ஆண்டு கூட்டுறவுதின விழாவில் ப. நோ. கூ. சங்கங்கள், தெங்குபனம் பொருள் உற்பத்திக்கூட்டுறவுச் சங்கங்கள், கடற்றொழில் கூட்டுறவு சங்கங்கள், ஐக்கிய நாணய சங்கங்கள் ஏனைய வகைச் சங்கங்கள் என்பனவற்றை பூரணமாகப் பங்குபெறுவதற்கு ஏற்ற வகையில் செயல்திட்டமொன்றை அமைத்து கூட்டுறவு தினவிழாவை நடாத்த முற்பட்டுள்ளது.

இவ்வாண்டு கூட்டுறவுதின விழாவையொட்டி வண்டில் சவாரி ஒன்றையும் நடாத்த திட்டமிட்டுள்ளதாக தெரியவருகிறது. மேலும் நாடக, பேச்சு, கட்டுரை, சித்திரப் போட்டிகளையும் மாவட்ட மட்டத்தில் நடாத்தவுள்ளது. (153)

# இந்திய படையினரால் யாழ். லக்சலா கிளைக்கு 7லட்சம்ரூபாசேதம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கைப்பணிச்சபையின் நிர்வாகத்தின் கீழ் உள்ள லக்சல யாழ். கிளைக்கு 1987 அக்டோபர் 10 இந்திய படையின் அசம்பாவிதங்களைத் தொடர்ந்து ஏழு லட்சம் ரூபா சேதமேற்பட்டுள்ளது.

யாழ்.கஸ்தூரியார் வீதியிலுள்ள ஒருகட்டிடத்தின் முதலாம் மாடியில் இந்த லக்சல கிளை இயங்கிவருகிறது. ஆனால் லக்சல கிளையில் விற்பனைக்காக பொருட்கள் இல்லாத நிலையில் விற்பனைசாலை காட்சியளிக்கிறது.

1980 ஜூனில் இருந்து இந்த இடத்தில் மேற்படி நிறுவனம் இயங்கி வருகிறது. முன்பு பன்னிரண்டு ஊழியர்கள் இங்கு கடமையாற்றினார்கள். இன்று ஒருமுகாமையாளரும் இரண்டு ஊழியர்கள் மட்டும் கடமையாற்றுகிறார்கள்.

யாழ். லக்சல விற்பனை நிலையத்தில் கைப்பணிப் பொருட்கள் விற்பனையும், கொள்வனவும் நடைபெறுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (153)

### கிளிநொச்சியிலும்

# மாணவர் உணவு முத்திரைத் திட்டம்

[கிளிநொச்சி]

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 77 பாடசாலைகளில் கல்வி பயிலும் 29111 மாணவர்களுக்கு மாவட்ட மேலதிக அரசஅதிபர் திரு. செ. அமிர்தலிங்கம் எடுத்த துரித நடவடிக்கையின் பயனாக உணவு முத்திரை மூலம் மதிய உணவு வழங்கும் திட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முதல் நடைமுறைப் படுத்தப்பட்டது.

உணவு முத்திரை மூலம் மதிய உணவு வழங்கும் திட்டம் பற்றி மேலதிக அரச அதிபரும் மாவட்ட வறுமை நிவாரண உதவி ஆணையாளருமான திரு. செ. அமிர்தலிங்கம் ஈழநாடுவுக்கு தகவல் தருகையில் நாள்ஒன்றுக்கு மாணவர் ஒருவருக்கு மூன்று ரூபாய் வீதம் உணவு முத்திரை வழங்கப்படும் கண்டாவளை உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள 19 பாடசாலைகளும் கிளிநொச்சி உதவி அரச அதிபர் பிரிவில் 20 பாடசாலைகளும் பளைப்பிரிவில் 13 பாடசாலைகளும் பூநகரிப் பிரிவில் 25 பாடசாலைகளும் இத்திட்டத்தில் அடங்குகின்றன.

இத்திட்டம் வெற்றிபெற அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர் ஒத்துழைப்பு நல்கி மாணவர்கள் நலத்திற்கு உதவுமாறும் மேலதிக அரச அதிபர் திரு. அமிர்தலிங்கம் ஈழநாடு மூலம் கேட்டுக் கொண்டார். [83]

### யுனிசேவ்

# நிறைவேற்று சபைக்கு இலங்கை தெரிவு

(நியூயோர்க்)

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர்களுக்கான நிதியத்தின் ஆளுநர் சபையான 'யுனிசெப்' நிறைவேற்று சபைக்கு இலங்கையும் தெரிவுசெய்யபட்டுள்ளது.

39 வருடங்களுக்குப் பின்னர் இலங்கை மீண்டும் இச்சபைக்குத் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# குடிதண்ணீரில் உவர்த்தன்மை

(யாழ்ப்பாணம்)

காவலூர்ப்பகுதியில் குழாயில்வரும் குடிதண்ணீர் உவர்த்தன்மையடைந்துள்ளதால் மக்கள் நன்னீருக்காக கரம்பன் நாரந்தனை முதலிய இடங்களுக்கு செல்லவேண்டியுள்ளது.

# விபத்தில் மரணம்

[மருதங்கேணி]

மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்குண்ட கோயில் பூசகரி மரணமானார். வத்திராயனைச் சேர்ந்த கோயில் பூசகரான க. சிற்றம்பலம் என்பவரே மோட்டார் சைக்கிளால் மோதுண்டு யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்பு மரணமானார். [53]

உலக கிண்ணப் போட்டி - கட்டுரைத் தொடர் - 8

# சவால்களைச் சந்திக்க தயார்

## என்கிறார் மேற்கு ஜேர்மன் பயிற்சியாளர்




ஐரோப்பிய நாடுகளின் தலைசிறந்த உதைபந்தாட்டக் கோஷ்டியாக விளங்கிவருவது மேற்கு ஜேர்மனிக் கோஷ்டி என்று கூறினால் அதையாரும் மறுக்கமாட்டார்கள்.

உலகின் தற்போதைய நிலையில் ஒப்பிடும்போது மே. ஜேர்மன் கோஷ்டி 3 வது இடத்தை வகிக்கின்றது.

மே. ஜேர்மன் உதைபந்தாட்ட ரசிகர்கள் உலகிலேயே தலைசிறந்த கட்டுப்பாடுடன் நடக்கும் ரசிகர்கள் எனப் பெயர்பெற்றவர்கள். மற்றைய நாடுகளில் உள்ள 'வெறிபிடித்த' ரசிகர்களைப்போல் இல்லாமல், வெற்றியையும்—தோல்வியையும் சமனாக நினைத்து நடக்கக்கூடியவர்கள் என உலகப்புகழ் பெற்றவர்கள்.

மற்றைய உலக நாடுகளின் உள்நாட்டு உதைபந்தாட்டப் போட்டிகளை மதிப்பிடும் போது மே. ஜேர்மனியின் உள்நாட்டு உதைபந்தாட்டப் போட்டிகள் உலகத்தரத்துடன் ஒப்பிடக்கூடியவை என 'உலக உதைபந்தாட்டச் சம்மேளனம்' கருத்து தெரிவித்துள்ளது.

முனிச், றம்பேக், பிறீமன், கேளின், டுசுல்டோப் போன்ற மே. ஜேர்மன் முக்கிய நகரங்களின் தெரிவுக்கோஷ்டிகளில் விளையாடும் வீரர்களே கூடுதலாக மே. ஜேர்மன் தேசியக் கோஷ்டியில் அங்கம் வகிக்கின்றார்கள்.

உலககிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டத்துக்கு, மே.ஜேர்மன் மட்டுமே ஐந்துதடவைகள் தெரிவு செய்யப்பட்டது. இவற்றில் இரு தடவைகள் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியதுடன் மூன்று தடவைகள் 2-வது இடத்தையும் பெற்றது.

இம்முறை உலகக்கிண்ண உதைபந்தாட்டப்போட்டி, மே. ஜேர்மன் கோஷ்டியின் பயிற்சியாளர் திரு. பிரன்ஸ் பேக்கென் பேக்கருக்கு ஓர் சவாலாகவே அமைந்துள்ளது.

திரு. பேக்கென் பேக்கர், ஒரு தலைசிறந்த உலகப் புகழ் பெற்ற உதைபந்தாட்டவீரர். இவரின் தலைமையில்தான் மேற்குஜெர்மன் 1974-ம்ஆண்டு 2-வது தடவையாக உலககிண்ணத்தை கைப்பற்றியது கடந்த ஆறு வருடங்களாக மேற்கு ஜேர்மன் கோஷ்டியை தனது அனுபவத்தாலும் ஆற்றலாலும் கடும் பயிற்சி அளித்து உருவாக்கி வருவதினால் இம்முறை உலக கிண்ணத்தை, இவரின் திறமை வென்றெடுக்க வைக்குமா என்பதையே உலக உதைபந்தாட்ட அவதானிகள் கூர்ந்து அவதானித்து வருகின்றார்கள். ஏனெனில், இம்முறையுடன் திரு. பேக்கென் பேக்கர், ஜேர்மனியிலிருந்து வெளியேறி "உலக உதைபந்தாட்டச் சம்மேளனத்தில்'' (FIFA) பொறுப்புள்ள பதவி வகிக்க இருக்கின்றார்.

ஜேர்மனி இரண்டாகப் பிரிந்தபின்பு, மே. ஜேர்மனி 10த் தடவைகள் உலக கிண்ணப் போட்டியில் விளையாடத் தகுதிபெற்றுள்ளது. இதன் ஆட்டத்திறமையை சீர்தூக்கிப் பார்க்கில், பிறேஸிலுக்கு அடுத்தபடியாக இது விளங்குகின்றது.

நமது விளையாட்டு நிருபர்
'தேவா'

1986ம் ஆண்டு இறுதியாட்டத்தில் ஆர்ஜன்ரீனா கோஷ்டியை திணறவைத்த மேற்கு ஜேர்மன் கோஷ்டியில் அங்கம் வகித்த பல வீரர்கள் இம்முறையும் விளையாடுகிறார்கள். இவர்களில் முன்னணி வீரர் பியேறே வித்பார்ஸ்கி அனுபவம் நிறைந்த ஒரு ''சாணக்கியர்'', கோல்காப்பு வீரர் சூமாக்கர் உலகப் புகழ்பெற்றவர். தோமஸ், அன்ரேறஸ் முல்லர், லோதர் மத்தாவுஸ், இவர்களுடன்புதுமுகங்களான போடோ இலஞர், றூடி வொல்லர் போன்ற சிறந்த வீரர்களும் இருக்கிறார்கள் மேற்கு ஜேர்மன் கோஷ்டியின் பின்னனி வீரர்கள் மிகவும் பலம்வாய்ந்தவர்கள் என்பது உலகநாடுகளின் கணிப்பு.

### சாதனைகள்

மேற்கு ஜேர்மன், உலக கிண்ணத்தை 1954, 1974 வென்றெடுத்தது. 1966, 1982, 1986ம் ஆண்டுகளில் 2வது இடத்தைப் பெற்றது.

இதுவரை, 61 உலக முதல தர ஆட்டங்களில் பங்கு பற்றி 35 போட்டிகளில் வெற்றிபெற்று, 14 போட்டிகளில் தோல்வியடைந்து 12 போட்டிகளை சமனாக்கி, 82 புள்ளிகளைப் பெற்றுள்ளது.

அடுத்து இங்கிலாந்துக் கோஷ்டியின் திறமைகளையும் அதன் சாதனைகளையும் பற்றிப் பார்ப்போம்.

# இப்படியும் நடக்கிறது

அந்த நாள் ஞாபகம் நெஞ்சிலே வந்ததே நண்பனே நண்பனே......

ஆமாம். நினைத்துப் பார்க்கின்றேன். அன்று இரவு மணி ஒன்பது பதினைந்தாகப் போகிறது.

இலங்கை வானொலிச் செய்திகளைக் கேட்டுவிட்டு இந்திய வானொலி (ஆங்கில) செய்தியைக் கேட்டுக்கொண்டிருந்த நேரம்... அச்சக ஊழியர் திரு. சிவனேசன் பதறப் பதற ஓடோடி வருகிறார்.

''பத்துப் பதினைந்துபேர் ஆயுதங்களுடன் வந்து முன் 'கேற்'றை உடைக்கிறார்கள்...'' என்ற சிவனேசனின் குரலில் பயங்கரம் எதிரொலித்தது!

ஒரு க்ஷணநேரம் கூட அங்கிருக்க விரும்பவில்லை. அருகில் இருந்த இயக்குநர் திரு. பா. சிவானந்தத்தைப் பார்த்தேன். அவர் எதையோ நினைத்துக் கொண்டிருந்தார், என்னுடன் அவர் வரவில்லை.

'ராக்கெட்' வேகத்தில் ஓடோடிச் சென்று நூறுயார் தூரத்தில் போய் நின்றேன். ஐந்துநிமிடம் கூட சென்றிருக்காது. கட்டிடமும், சாதனங்களும் தீவாயில் அகப்பட்டு அந்த ஜுவாலை ஒரு தென்னைமர உயரத்துக்கு விண்ணை நோக்கி எழுந்து கொண்டிருந்தது!

அப்பப்பா...! இரண்டு மூன்று மணிநேரத்துக்குள்ளேயே எல்லாமே பஸ்பமாகிவிட்டது!

கட்டிடத்துக்கு முன்பாக 'கராஜி'ல் நின்ற, ஊழியர்களின் சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள், மோட்டார் சைக்கிள்கள் எல்லாமே ஒன்றுக்கு மேல் ஒன்று அடுக்கிவைக்கப்பட்டு, அத்தனையும் அக்கினிக்கு இரையாக்கியிருந்தனர், அந்த அரச கமாண்டோக்கள்!

இந்தக் கோரச்சம்பவம் நடந்தது 1981 மே 31ம் திகதி. நடத்தியவர்கள் இலங்கை அரச கமாண்டோக்கள். தீக்கிரையானது உங்கள் 'ஈழநாடு'!

உடல் முழுக்க தீக்காயங்களுக்கு இலக்கான இயக்குநர் திரு. பா. சிவானந்தம் ஆஸ்பத்திரியில் படுக்கையில் வீழ்ந்தாலும் அவரது மூச்சு 'ஈழநாடா'கவே இருந்தது. அவருடன் சேர்ந்து தீக்காயங்களுக்காளானவர் 'ஈழநாடு' விநியோகப்பகுதி ஐயா சச்சிதானந்தம்.

திரு. சிவானந்தத்தின் பெருமுயற்சியில் ஆறாவது நாளே 'ஈழநாடு' மீண்டும் வாசகர்கள் கையில் மலர்ந்தது.

ஜூன் மாதம் முதலாம் திகதி அதிகாலை கேட்ட மற்றுமொரு அதிர்ச்சிச் செய்தி—

தமிழ் மக்களின் தனிச்சொத்தான யாழ். நூலகம் எரிந்து கொண்டிருந்தது!

'ஊடுருவி'

யாழ். மாவட்டம்

# விளையாட்டுத்துறையில் பின்னடையவில்லை

(காங்கேசன்துறை)

''கடந்தகால சூழ்நிலைகளின் மத்தியிலும் யாழ். மாவட்டம் விளையாட்டுத்துறையில் பின்னடையவில்லை என்பது தற்போது நிரூபணமாகியுள்ளது. இன்றைய விளையாட்டு விழாவில் 6 புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டமை எமக்குப் பெருமை தருகிறது. தேசிய ரீதியிலும் யாழ். மாவட்டம் முன்னணியில் திகழும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது''

இவ்வாறு தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியில் இடம் பெற்றயாழ் மாவட்ட உதவி அரசாங்கஅதிபர் பிரிவுகளுக்கிடையிலான விளையாட்டு போட்டியில் பிரதம அதிதியாக கலந்துரையாற்றிய வடக்குகிழக்கு மாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் திரு. எஸ். மரியதாஸ் கூறினார்.

வலிவடக்கு விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் திரு. ஆர்.றேஹான் இராஜசிங்கத்தின் ஏற்பாட்டின் பேரில் இடம்பெற்ற இவ்விளையாட்டுப் போட்டியில் அவர்மேலும் பேசுகையில் கூறியதாவது:

விளையாட்டுப்போட்டிகளை ஒரேஇடத்தில் மட்டும் நடத்துவதால் பயன் ஏற்படாது என்று கருதியே மாவட்ட ரீதியான போட்டிகளை தெல்லிப்பழையில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. ஒவ்வொரு பகுதியிலும் நடத்துவதால் அப்பகுதி மக்களிடையே விளையாட்டுஆர்வத்தை ஏற்படுத்த முடியும். இனிமேல் நடைபெறும் போட்டிகள் பரவலாக மற்றும் இடங்களிலும் நடத்தப்படும் என்றார்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட பலாலி ஆசிரிய கலாசாலை முன்னாள் விரிவுரையாளர் திரு. இ. கனகலிங்கமும் உரையாற்றினார்.

யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. ஏகாம்பரம், தெல்லிப்பழை தந்தை செல்வாபுரம் கிராமசேவையாளர் திரு. ஆர். ஜேசுபாலன் உட்பட மற்றும் பலர் இவ்விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டனர். (86)

பொறியியல்

## மாணவர் மன்ற நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியின் ''பொறியியல் மாணவர் மன்ற''த்தின் 1990-1991ம் ஆண்டுக்கான நிர்வாக உறுப்பினர்கள்தெரிவு அண்மையில் தொழில்நுட்பக் கல்லூரியின் உப அதிபர் திரு. கே. ஜெயரட்ணம் முன்னிலையில் மன்றத்தலைவர் திரு. விவேகானந்தன் தலைமையில்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

நிர்வாக உறுப்பினர்களாக பின்வருவோர்தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர்: எம், தமிழ்ச்செல்வன் உபதலைவர்: ஆர். யுவராஜாசெயலாளர்: கா யோ. கிரிதரன் உபசெயலாளர்: ஜீ. வசந்த குணபாலன் பொருளாளர்: கே. சிவத்திரன் கொள்கை பரப்புச்செயலாளர்கள்: செல்வி. எஸ், குமுதம், ஜீ. சுகந்தன் பத்திராதிபர், எஸ். ரவிச்சந்திரன் கணக்குப் பரிசோதகர்கள்: என். ஸ்ரீஸ்கந்தராஜா பீ. எழில்இளங்கதிர்.

இத்துடன் நிர்வாக குழு உறுப்பினர்களாக மேலும் பத்துப் பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

## கற்பிப்பதில்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் சமுதாயம் மீண்டும் டத்துயிர்பெற ஆசிரியர்களே வழிகாட்டிகளாக அமையவேண்டும்.

இவ்விழாவில் ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை அதிபர் திரு. நா. சிவபாதம், நவாலி தெற்கு அ. மி. த. க. பாடசாலை அதிபர் திரு. க. கணபதிப்பிள்ளை, நவாலி மகாவித்தியால உப அதிபர் திரு. சி நாகையா ஆகியோர் கடந்த ஆண்டு ஒருநாளும் லீவு எடாதமை குறித்து பாராட்டுச் சான்றிதழ்களை கல்விப் பணிப்பாளரிடம் இருந்து பெற்றுக் கொண்டனர்.

அதிபர்கள் அ. மகாலிங்கம், இ. கந்தையா, க. கணேசலிங்கம், திருமதி சுப்பிரமணியம் செட்டியார் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

## நற்குணத்துக்கு அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

சமாதான சைக்கிள் பவனியில் சென்று அகால மரணமடைந்த நாகமுத்து நற்குணத்தின் நினைவுநாள் பளை மகாவித்தியாலய சாரணர் குழுவினால் மகாவித்தியாலய மண்டபத்தில் நினைவுமலர் வெளியீட்டுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிடம சாரணர் குழுவினால் சமாதானசெய்தி வழங்கப்பட்ட அதே தினத்தில் தான் நற்குணத்தின் நினைவு மலரும் வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. கொத்தணி அதிபர் திரு. அ. பொ. செல்லையா தலைமைவகித்தார். ஆசிரியைகள் திருமதி சா. அருந்தவபாலன், செல்வி சே. பவானி, திருமதி செள. தர்மலிங்கம், கே. விக்கினேஸ்வரன், குணரூபன், செல்வி த. ரேவதி, பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் கி. சிவஞானம் ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர்கள்.

நற்குணம் அகால மரணமடைந்த இடத்தில் பளை மகாவித்தியாலய சாரணர் மௌன அஞ்சலி செலுத்திய பின்பாதயாத்திரையைதொடர்ந்தது குறிப்பிடத்தக்கது.

## யாருடையது?

யாழ்ப்பாணம் நாவலர் வீதி அத்தியடி புதிய வீதி சந்திக்கு சமீபத்தில் கைக்கடிகாரமொன்று யாழ், அத்தியடி புதிய வீதியைச் சேர்ந்த கா, யோ. கிரிதரனால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது, உரியவர்கள் அத்தாட்சி காட்டிபெற்றுக்கொள்ளலாம்.

## இல்ல விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி நாளை 1ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2. 15 மணியளவில் கல்லூரிவிளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

## தலைவராக தெரிவு

(யாழ்ப்பாணம்)

பருத்தியடைப்பு ஊருண்டிக் கிராமிய கடற்தொழில் சமூக அபிவிருத்தி அமைப்பின் தலைவராக திரு. ஆ. இரத்தினசாமி தெரிவுசெய்யப்பட்டுள்ளார். சமூகசேவையாளரான இவர் உருண்டிக் கிராமத்தின் அபிவிருத்திக்காக தொண்டாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கூட்டுறவு மாநாடு திருமலையில் நடைபெறும்

[யாழ்ப்பாணம்]

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர்கள், செயலாளர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கலந்து கொள்ளும் மாநாடு ஜூன் மாதம் 12-ம் திகதி திருகோணமலையில் வடக்கு கிழக்கு கூட்டுறவு ஆணையாளரின் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

வடக்கு கிழக்கு மாகாணத்திற்கென தனியான கூட்டுறவுச் சபையை அமைக்கும் விடயம் பற்றி முக்கியமாக கலந்துரையாடவிருக்கிறது.

அத்துடன் கூட்டுறவுநிதி சம்பந்தமான செயற்பாடுகள். கூட்டுறவுச்சபைகல்வி விடயங்கள் கையாளுவதற்கான ஒழுங்குகள், கூட்டுறவுச்சபைகள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் போன்ற விடயங்கள் இம்மகாநாட்டில் கலந்துரையாடப்படவிருக்கின்றன. [153]

போதைவஸ்து கடத்தல்:

# மலேசியாவில் எட்டுப் பேர் நேற்று தூக்கிலிடப்பட்டனர்

(கோலாலம்பூர்)

போதை வஸ்துக் குற்றச் சாட்டின் பேரில் மலேசியாவில் நேற்று அதிகாலை எட்டுப் பேர் தூக்கிலிடப்பட்டு கொல்லப்பட்டார்கள்.

ஒரு பெண்மணி உட்படஏழு ஹொங்கொங் சீனர்களே இவ்வாறு கொல்லப்பட்டவராவார்கள்

மலேசியாவின் வரலாற்றில் எட்டுப்பேர் தூக்கிலிடப்பட்டது இதுவே முதல் தடவையாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

1982-ம் ஆண்டு போதை வஸ்து வைத்திருந்த குற்றத்திற்காக கைதுசெய்யப்பட்ட இவர்களுக்கு 1985-ம் ஆண்டு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

இவர்கள் தமக்கு மன்னிப்பு வழங்குமாறு உயிர்ப்பிச்சை கேட்டு விடுத்த கோரிக்கையை மலேசிய நீதிமன்றம் நிராகரித்தது. [து]

# நேற்றைய விபத்துக்களில் ஒன்பது பேர் படுகாயம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய பகுதிக்ளில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்துக்களில் ஒன்பதுபேர் படுகாயம் அடைந்தனர்.

யாழ்ப்பாணம் கொட்டடிச் சந்தியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்-சைக்கிள் விபத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த நாகபாலன் பாலச்சந்திரன் (வயது 13) என்ற சிறுவனும், மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த காரைநகரைச் சேர்ந்த தம்பிராசா ஜெயச்சந்திரன் (வயது 21) இளைஞனும் படுகாயமடைந்தனர்.

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் இடம்பெற்ற இரண்டு மோட்டார் சைக்கிள் விபத்தில் நாவலர் வீதியைச்சேர்ந்த குமாரசாமி கௌரி (வயது 20) என்ற இளம்பெண் படுகாயம் அடைந்தார்.

சாவகச்சேரி சங்கத்தானையில் இடம்பெற்ற விபத்தில் கச்சாய் வீதியைச் சேர்ந்த அப்துல் ரகீம் நிலாப்தீன் (வயது-20) என்பவரும், சாவகச்சேரியைச் சேர்நத குமாரசாமி அற்புதராசா (வயது 24) என்பவரும் படுகாயமடைந்தனர். சைக்கிள்கள் பலத்த சேதம் அடைந்தன.

வவுனியா அடப்பன்குளத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பெரிய நொச்சிக்குளத்தைச் சேர்ந்த அருளப்பு சந்தியாபிள்ளை (வயது 36) என்பவர் படுகாயம் அடைந்தார்.

வவுனியா கள்ளிக்குளத்தில் இடம்பெற்ற சைக்கிள் விபத்தில் வவுனியாவைச் சேர்ந்த முருகேசு கனகசபை (வயது-62) என்பவர் படுகாயமடைந்தார்.

வேலணை சுருவிலில் இடம் பெற்ற சைக்கிள் விபத்தில் லில்லிபுஷ்பம் (வயது 20) என்ற இளம்பெண் படுகாயமடைந்தார்.

சுன்னாகத்தில் இடம்பெற்ற லொறி விபத்தில் உரும்பராயைச்சேர்ந்த இராமச்சந்திரன் தினேஷ்குமார் (வயது 15) என்ற இளைஞன் படுகாயம் அடைந்தார். (56)

## இரு பெண்களின் திருட்டு முயற்சி தோல்வி

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் வெளி நோயாளர் பகுதியில் நேற்றுக்காலை குழந்தையொன்றின் காப்பை திருட முயன்ற இரு பெண்கள் கையும் மெய்யுமாகப் பிடிபட்டனர்.

வெளிநோயாளர் பகுதி குழந்தைகள் சிகிச்சை பெறும் பிரிவில் சிகிச்சைக்காகக் காத்திருந்த சன நெருக்கடியைப் பயன்படுத்தி இரு பெண்கள் நெருக்கமாக நின்று குழந்தையின் கையில் இருந்த காப்பைக் கழற்றி இழுக்கும்போது இவர்கள் கையும் மெய்யுமாகப் பிடிபட்டனர். (56)

### வாக்காளர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புத் திருத்தும் வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கடந்த பல வருடங்களாக நிலவிய சூழ்நிலை காரணமாக வாக்காளர் இடாப்புகள் வீடு வீடாகச் சென்று சரியான விபரங்களைத்திரட்டித் தயாரிக்கப்படாமல் பழைய வாக்காளர் இடாப்புக்களின்படியே சிறு திருத்தங்களுடன் உபயோகிப்பட்டு வந்தன. (86)

# யாழ். நகரிலுள்ள கடற்றொழில் அபிவிருத்தி தகவல் நிலையம் விரிவுபடுத்தப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரிலுள்ள போரூட் ஸ்தாபனததின் கடற்றொழில அபிவிருத்தி தகவல் நிலையம் வெளிநாட்டு ஸ்தாபனங்களின் உதவியுடன் அபிவிருத்தி செய்யப்படவிருக்கிறது.

யாழ்ப்பாண பல்கலைக் கழகம், நோர்வே நாட்டு பல்கலைக் கழகம் மற்றும் வெளிநாட்டு பல்கலைக் கழகங்கள், உணவு விவசாய ஸ்தாபனம் ஆகியவற்றுடன் இணைந்து மேற்படி தகவல் நிலையத்தை விரிவுபடுத்த ஏற்பாடுகள்செய்யப்படவிருக்கின்றன,

நேற்று முன்தினம் யாழ். ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் போரூட் ஸ்தாபனத்தின் வதிவிடப் பிரதிநிதி திரு. ஆரே ஏரிக்சன் மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

'இந்த தகவல் நிலையம் ஆரம்ப நிலையில் உள்ளது, இம்முறை 19 லட்சம் ரூபா நிதியை மேற்படி நிலையத்துக்கு ஒதுக்க திட்டமிட்டுள்ளோம். இப்பொழுது கடற்றொழிலாளர்கள் பற்றிய விபரங்கள் திரட்டப்படுகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள தண்ணீரூற்று, நீராவிப்பிட்டி ஹிஜ்ரரபுரம் ஆகிய இடங்களில் மீள்குடியேற்றம் சம்பந்தமாக வீடுகள், தொழில்கள் ஆகியமற்றை புனரமைக்க ஒரு கோடி ரூபா நிதியை ஒதுக்க தீர்மானித்துள்ளோம்''. (153)

### நயினாதீவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இறங்குதுறை மேடைதற்காலிகமாக மண்சாக்குகளில் ஊரிமணல் போட்ட மூடைகளினால் அமைக்கப்படவுள்ளது.

கடந்த ஏழு வருடங்களாக நயினாதீவு துறைமுக இறங்குதுறை நிரந்தரமாக திருத்துவதற்கு எந்த முயற்சிகளும் இதுவரை எடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

மேற்படி இறங்குதுறை தற்காலிகமாக திருவிழாக் காலங்களில் திருத்தப்படுவது வழக்கம். இந்த இறங்குதுறை கடலரிப்பினால் பெருமளவில் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகிறது. (153)

### இந்திய உள்துறை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விவகாரத்தைக் கையாண்ட முறையையும் கண்டித்தனர்.

கடந்த டிசம்பர் மாதம் உள்துறை அமைச்சரின் மகள் காஷ்மீர் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டபோது அவர் தமதுமகளின் விடுதலைக்காக ஐந்து கடும்போக்குத் தீவிரவாதிகளையும் விடுதலை செய்யும்படி உத்தரவிட்டதையே அவர்கள் சாடியிருப்பதுபோல் தெரிகிறது.

இந்தக் கடிதத்தில் பிரதமருக்கு நெருங்கிய இருவரும், துணைப் பிரதமர் தேவிலாலுக்கு நெருங்கியவர்களும் கைச்சாத்திட்டுள்ளனர்.

### மாணவர் இயக்கம்

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

புதிர்ப் போட்டி யூன் மாதம் 6ம் திகதி நடைபெறவிருக்கின்றது.

தென்மராட்சிக் கோட்டத்திற்கான இப்புதிர்ப்போட்டி மேற்படி தினம் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெறுமென தென்மராட்சி மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. ரஞ்சன் தெரிவித்தார். (107)

# தீவுப்பகுதியில் பனை மர[...] தறிப்பதற்கு தடை

[வேலணை]

தீவுப் பகுதியில் பனைமரம் தறிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது

வீடுகட்டுவதற்கு மற்றும் தேவைகளுக்காகத் தமது சொந்த வளவுகளில் பனைமரம் தறிக்கப்பட வேண்டுமாயின் தறிக்கும் பனைகளுக்குப் பதிலாகப் பனை நாற்றுக்கள் நடுவோமென்ற ஒப்பந்தம்செய்[...] மட்டும் தறிப்பதற்கு அனு[...] வழங்கப்படும்.

இதற்கான அனுமதி[...] அருகிலுள்ள சிற்றூர் அ[...]களில் பெறவேண்டும்.

வேம்பு, மா போன்ற [...] மதிமிக்க மரங்கள் தறிப்ப[...]கும் விடுதலைப் புலிகளின் [...]தரவு பெறப்படவேண்டும்.

# அதிபர் தாக்கி மாணவன் படுகாயம்!

(வடமராட்சி)

வடமராட்சியிலுள்ள பாடசாலையொன்றில் 6ம் ஆண்டு கல்விபயிலும் மாணவன் பாடசாலை அதிபர் மொத்தமான தடியால் தாக்கியதன் காரணமாக எலும்பு நொருங்கிய நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பாடசாலை மாணவரிடையே ஏற்பட்ட தகராறைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட மாணவனை அதிபர் பூவரசம் தடியினால் தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பான முறைப்பாடொன்று பாதிக்கப்பட்ட மாணவனின் பெற்றோரி[...] விடுதலைப் புலிகள் மக்கள் [...]னணி மூலமாக வட[...] கோட்டக் கல்லூரி அதி[...] சமர்ப்பிக்கப்பட்டுள்ள[...]

குறிப்பிட்ட கல்லூரி[...] ஆண்டு கல்விகற்கும்[...] ராசா விமலதாஸ் (வ[...] என்னும் மாணவனே[...]னால் கடுமையாகத் [...] பட்டவராவார்.

இச்சம்பவத்தில் [...] பட்ட மாணவன் மந்[...]கினர் வைத்திய சா[...] சிகிச்சைபெற்று வ[...] இருதடவைகள் ச[...]சைக் குட்படுத்தப்[...]ளார்.

### பி. பி- சி.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படுவதை அடுத்து வேறு மூன்று சேவைகள் மேலதிக ஊட்டம் பெறப் போகின்றன.

ரஷ்ய மொழிக்கும், சீன மொழிக்கும் இப்போது உள்ளதைவிட மேலும் மூன்றரை மணிநேரம் ஒவ்வொரு வாரமும் கூடுதலாகக் கிடைக்கும்.

வியட்நாமிய மொழிச் சேவைக்கு மேலும் ஒன்றரை மணிநேரம் கூடுதலாகக் கிடைக்கும், ஆங்கிலச் சேவைக்கும் கூடுதலான நேரம் கிடைக்கும்.

ஆசியா, ஐரோப்பா முழுவதும் ஒரு முழு மணிநேர ஆங்கிலப் பாடம் இடம் பெறும்.

1941-ம் ஆண்டிலிருந்து ஒலிபரப்பாகும் ஜப்பானிய, மலாய் மொழிச் சேவைகள் முற்றாக நிறுத்தப்படுவதை ஒட்டி உலக சேவை முகாமைப் பணிப்பாளர் திரு. ஜோன்டூசா ஆழ்ந்த வருத்தம் தெரிவித்திருக்கிறார்.

இதற்கு அரசியல் காரணம் எதுவும் கிடையாது என்று பிரிட்டிஷ் அரசு அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்திக் கூறினார்.

### கிராமோதய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சு. டிவகலாலா நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் யாழ். மாவட்டத்திலுள்ள சகல உதவி அரசாங்க அதிபர்களுக்கும் இதுதொடர்பாகச் சுற்றுநிருபம் அனுப்பி வைத்துள்ளார்.

முன்பு யாழ். மாவட்டத்திலுள்ள சகல கிராமோதயசபைகளும் 6வது திருத்தச் சட்டப்படி இரகசியக் காப்பு சத்தியப் பிரமாணம் அங்கத்தவர்கள் எடுக்கவேண்டுமென்று அரசாங்கம் பணித்தமையினால் கடந்த பல வருடங்களாக இயங்காமலிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

யாழ். மாவட்டத்தில் தற்போது 435 கிராமசேவை அலுவலர்கள் பிரிவுகள் இருக்கின்றன. ஆதலால் 435 கிராமோதய சபைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கிராமோதய சபைகளின் செயலாளர்களாக அவ்வப் பகுதிக் கிராமசேவை அலுவலர்களும், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் அங்கத்தவர்களாகவும், இந்த அங்கதத்வர்களிடம் இருந்தே தலைவர் ஒருவர் தெரிவுசெய்யப்படுவதும், அரசாங்க அலுவலர்கள் உறுப்பினர்களாகவும் இருப்பது நடைமுறையாகும்.

### விண்வெளிக்கு[...] இந்திய[...] செயற்கை[...]

(பெங்களூர்[...]

பாரதத்தின் [...]கோளான இன்[...]டிஐ எதிர்வரும் [...]திகதி விண்ணில் [...]தற்கான ஏற்பாடு[...]யப்பட்டுவிட்டன[...]

இந்த செயற்[...] ஏற்கனவே அ[...]ள்ள கென்னடி [...] நிலையத்துக்கு அ[...] விட்டது.

### கொடுப்பன[...]

[1-ம் பக்கத் [...]

அமைச்சின் [...] வெளியிடப்பட்[...]

தகுந்த முன[...] வழங்குதல் சம[...] கணக்குகளைப் பேணு[...]ருட்டான விதிமுன[...] வழிமுறைகளையும் சபைகளே செய்து [...] வேண்டும் என்றும் [...]றிக்கையில் தெரிவி[...]டுள்ளது.

இந்தச் சுற்றறிக்கை[...]ச்சுக்களின் செயல[...] மாகாண சபைகளி[...] செயலாளர்கள், தி[...] தலைவர்கள், ஆணை[...] செயலாளர்கள், அதிபர்கள் ஆகி[...] அனுப்பிவைக்கப் ப[...]

### வடக்கு-கிழக்கு[...]

(1ம் பக்கத் தொ[...]

அரசாங்கம் எட்டு[...] ஐம்பது லட்சம் ரூ[...] வழங்கியுள்ளது.

அவசர உணவு[...] மேலும் சுமார் ஒ[...]ப்த்தாறு லட்சம் [...] இத்தாலிய அரசா[...]விருக்கிறது.

இராணுவ [...]களின் காரணம[...] பெயர்ந்து மீ[...] இருப்பிடங்களுக்[...]யுள்ளவர்களுக்கு [...] போஷாக்கு, உ[...] நிலைமைகளை அ[...]வதற்கும், உள்ளூ[...] ஊழியர்களுக்கு[...] தொழில்நுட்ப [...] வழங்குவதற்குப்[...] உதவி பயன்ப[...]ளது.

இந்த உ[...] தொடர்பான [...] இலங்கையிலுள்[...]யத் தூதுவர் [...] மார்டினும், [...] செயலாளர் திரு[...] கரலிங்கமும் [...] சாத்திட்டனர்.

## பாஸ்போர்ட் கிடைத்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 89-ம் ஆண்டு நவம்பர் மாதம் சர்வதேச நாடுகளுக்குச் செல்வதற்கான கடவுச்சீட்டுக்கு விண்பித்த மேற்படி சிறுமிக்கு 89 டிசம்பர் 21ல் கடவுச்சீட்டு எழுதப்பட்டு அவரின் யாழ்ப்பாண முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இம்மாதம் 26ம் திகதி குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தினால் இவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் கடவுச்சீட்டு வழங்குவதற்கு இவரது தாய் தந்யரின் கடவுச்சீட்டைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இக்கடிதம் கிடைத்தும் சம்பந்தப்பட்ட குடும்பத்தினர் ஆச்சரியமும், அதிர்ச்சியும் அடைந்துள்ளனர். (71)

## சிறுவர் கழகம் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத்தில் இன்று வியாழக்கிழமை அறவழி நல்லொழுக்க சிறுவர் கழகம் அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெறவுள்ளது.

அறவழிப் போராட்டக் குழு தலைவர் கே. கோபாலகிருஷ்ணன், நிர்வாக இயக்குநர் க. ஜீவகதாஸ் ஆகியோர் இக்கழகத்தை அங்குரார்ப்பணம் செய்துவைப்பார்கள். (து)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு வைகாசி மாதம் 31-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.